1400

Registered No. M. 878.

5-MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion Science, Art and Civilization

தொகுதி 7 | 1917-ஹு பிப்ரவரிமீ நளஹு மாசிமீ | பகுதி 10

அ ரங்கசாமி ஐயர், B.A.,B.L., F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணு 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

பொருளடக்கம்.
(CONTENTS.)

		பக்கம்
1.	தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி.ஏ.	363
	Current events—R. Rangaswamy Iyer. B. A.	395
2.	இல்லற தருமம்—தி. யம். முகையதீன் கவிராயர்	371
	Dharma of a House-holder—T. M. Mohideen Kavirayar	
3.	பிரஹ்மக்ஞான தரிசனம்—வி. வெங்குசாமி ஐயர்	374
	Elements of Theosophy—V. Vengusamy Iyer	
4.	கீதாவாக்கியங்கள்—ஆர். யஸ். நாராயணசாமி ஐயர்	377
	Sayings from the Bhagavad-Gita-R. S. Narayanasamy Iyer	
5.	வாய்மை—மு. வேங்கடசாமி நாட்டார்	383
	Truth— M. Venkatasamy Nattar	
6.	மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் யம். ஏ.	384
	Meerabai—R. Sreenivasa Aiyer, M. A.	
7.	நக்ஷத்ர சேவகர்களின் சங்கம்—Servants of the Star	
	சிறுவர்களுக்குக் கடிதம்—Letter to children	390
8.	ஆத்மபோதம்—யோகி சுந்தரராஜய்யர்	398
	Atmabodham—Yogi Sundararajier	
9.	ஓர் முக்ய அறிவிப்பு—An Important Notice	401
10.	சமாசாரம்—News	401

லோக குருவாகிய பரமர் வருவானேன்?

இதுவரை பூர்ணசந்திரோதயத்தில் தமிழில் வெளி வாராதது. பிரஹ்மக்ஞான சபையாருள் ஸூக்ஷ்ம திருஷ்டி பெற்ற ஒரு வித்தராகிய ஸ்ரீமான் லெட்பீடரவர்கள், விட்னீ கன்கார்டியா ஹாலில், ஓர் பெரிய ஜனத் திரளுக்குச் செய்த அரியதோர் உபந்யாஸம். ஜகத்குரு வரவேண்டியதற்கு தற்காலம் என்ன அவசியம் நேர்ந்தது என்று பல காரணங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் விலை அணா ஒன்று தான். தபாற்கூலி ப்ரத்யேகம் ½ அணா. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு 1½ அணா, ஸ்டாம்பு மூல மனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான மந்திரம்,

மதுரை.

இரத்னபுரி ரகசியம்.

ஓர் அற்புதமான புது நாவல் 2 பாகங்கள்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக் கூடியவையும் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக் கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளை யுடைய பாத்திரங்களும் இருப்பதால் அனேக நீதிகளும் புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் தெளிவான இனிய தமிழ் நடையில் எழுதப் பெற்றது. நமது சிறுவர் சிறுமி களும் ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப் பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறார். இதன் முதற் பாகத்தின் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப் பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதின்றும். இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றன வென்று மட்டும் கூறுகிறோம்.

இது உயர்ந்த கடிதத்தில் அச்சிடப் பட்டது. டபிள் கிரௌன் 1-க்கு 16 கொண்ட அளவில் 1260 பக்கங்கள் கொண்டது 2-ம் பாகத்தில் நூலாசிரியருடைய ஆப்டோன் படம் அடங்கியிருக்கிறது

விலை 2 பாகங்களும்	ரூ.	3	4	0
2-ம் பாகம் (முதற்பாகம் வாங்கியவர்கட்கு மட்டும்)	ரூ.	1	12	0

குறிப்பு:—ஆனந்தபோதினி சந்தாதாரர்கட்கு மார்ச்சு மாதக் கடைசி வரையில் இரண்டு பாகமும். ரூபா 2—12—0. சீக்கிரம் முந்துங்கள்.

ஆனந்த போதினி.

ஒரு முதல்தர மாதாந்தத் தமிழ் சஞ்சிகை. சிறியோர் பெரியோர் யாவரும் அவசியம் வாசிக்கத் தக்கது. 40 பக்கம் விஷயங்களடங்கியது.

வருஷ சந்தா விகிதம்	இந்தியா பர்மா, சிலோனுக்கு ரூபா ...	ரூ.	1	0	0
	வெளிநாடுகளுக்கு ...	ரூ.	1	4	0

ஆனந்தபோதினி மாதிரி காப்பி கடிதம் எழுதினால் இலவசமாய் அனுப்பப்படும்.

மானேஜர்:- ஆனந்தபோதினி ஆபீஸ்,

நெ. 6. வெங்கிடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை,

மதராஸ்.

1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும்,

பார்சல்கள் வாங்கும்போழுது அடியிற்கண்ட விலாசம்
சரியாக யிருக்கப்பட்ட லேபிலைப் பார்த்து வாங்குங்கள்.

உலகப்பிரசித்தி பெற்ற சாலாமிசிரி முறப்பா
கவர்மேண்டில் ரிஜிஸ்டராயிருக்கிறது.

ஐயா, கனவான்களே! அநேக ஜனங்கள் உபயோகிக்கத்தகாத மருந்துகள் பலவற்றைப் பிரசுரம் செய்து அநேக ஜனங்களை மோசம் செய்கிறார்கள். எங்கள் மருந்தை அம்மாதிரியாக நம்புவீர்களென்று ஓர் சந்தேகம் தோன்றுகிறது. ஆகையால் ஒரு தரம் வரவழைத்துப் பரீட்சித்தால் பிறகு தங்களுக்குத் தாங்களே அறிவீர்கள். ஆரோக்கிய பாக்கியத்திற்கும் சந்தானம் ஆயுசு, பலம், தேஜசு முதலானவைகள் உண்டாவதற்கும் மனிதருக்கு ரத்தமே மூலமாயிருக்கிறது. ஆனதால். ஆரோக்கிய பாக்யமே பாக்யம் என்ற பழமொழிபோல் இரத்தத்தை ஒவ்வொரு மனிதனும் கெட்டுப்போகாமல் சுத்தமாய் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதவசியம் இல்லாவிட்டால் நானாவிதமான வியாதிகள் உண்டாகி மரணகால பரியந்தம் விசனத்திற்கு ஆளாக்குகிறது. சாலாமிசிரி என்பது ஓர்வித பழம். அது காபூல்கந்தர், ஆப்கனிஸ்டான் தேசங்களில் ஏராளமாக விளைகிறது. நாம் அந்த சாலாமிசிரியை தருவித்து அதில் முறப்பா செய்திருக்கிறோம். சாலாமிசிரி முறப்பா மூத்திரசம்பந்தமான அநேக வித வியாதிகளையும் இரத்த சம்பந்தமான அநேக வித வியாதிகளையும், இரத்தம் கெட்டுப்போயிருப்பதையும் கை, கால், தலைநோய், இடுப்பு நோய், முதலான வியாதிகளையும் இன்னும் அநேகவித வியாதிகளையும் சுவஸ்தப்படுத்தி தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும். அப்படி கொடுக்கிறதில் யாதொரு ஆக்ஷேபணையும் கிடையாது. தாம்பிர பஸ்பம், வெள்ளி பஸ்பம், தங்க பஸ்பம், இவைகளைக் காட்டிலும் நமது சாலாமிசிரி முறப்பா மிகவும் மேன்மையானது. தவிர மற்றெதுவும் இம்முறப்பாவுக்கு ஈடாகாது. இம்முறப்பாவில் எவ்விதமான அசுசி பதார்த்தங்கள் சேருகிறதில்லை. மிகவும் மேன்மையான பதார்த்தங்களும் அதிக விலையுயர்ந்த சரக்குகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டிருக்கிறது. இம்முறப்பா சாலாமிசிரியால் செய்யப்படவில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனாம் கொடுக்கப்படும். அப்படி கொடுக்காதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்துகொள்ளலாம்.

டப்பி ஒன்றை உபயோகித்தால் பூரணமாய் சுகத்தைக்கொடுக்கும் 2, 3-டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது.

கிரயம்:—டப்பி 1-க்கு ரூபாய் 2—0—0. போஸ்டேஜ் 1-டப்பி முதல் 3-டப்பி வரையில் அணா 0—6—0. காலணா கார்டில் எழுதினால் உடனே வி. பி. மூலமாய் தங்கள் இருப்பிடத்தை பார்சல் தேடிக்கொண்டுவரும்படி அனுப்ப தயாராயிருக்கிறோம்.

சாமான்களுக்கு ஆர்டர் செய்பவர்கள் பிழையில்லாமல் தங்கள் விலாசங்களை விபரமாயும் தெளிவாயும் எழுதவும்.

டி. மன்னாலால் டில்லி வைத்தியர்,
நெ. 5. ஆவினியூ ரோட்டு, பெங்களூர் சிட்டி.

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்

தொகுதி 7 | 1917-௵ பிப்ரவரி௴ நள௵ மாசி௴ | பகுதி 10

தற்கால நிலைமை.

சென்ற வருஷம் டிசம்பர்௴ 29௳ லக்ஷ்மண புரியில் 10,000 ஜனங்கள் கூடிய ஓர் சபையில் ஸ்ரீமான் காந்தியவர்கள் அக்கிராசனத்தில் அமர, இந்தியாமுழுதும் ஒற்றுமையடையும் பொருட்டும், பற்பல பாகத்தினரும் ஒருவரோடொருவர் தடையின்றி சம்பாஷிக்கவும் கடிதங்கள் மூலமாய்த்தங்கள் க்ஷேமலாபங்களை அறியவும் பத்திரிகைகளைப் பலரும் படித்தறியவும் இயலும்படி செய்யும்பொருட்டும் ஹிந்திபாஷையையும், நாகரிலிபியையும் இந்தியர் யாவரும் கற்கவேண்டுமென்று தீர்மானம் கொள்ளப்பட்டது. இந்தியா ஐகமத்தியம்பெறும்படி இந்தியர் செய்யும் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

*
* *

நமது ஸநாதன தர்மத்தின் கோட்பாடுகள் எல்லாம் பிரஹ்மக்ஞான சபைத் தலைவர்களால் உண்மையெனக் கொள்ளப்பட்டிருப்பதால் அந்த தத்வங்களை உலகத்தில்

வெகுபலர் உண்மையெனக் கருதுகின்றனர். அதனாலேயே அவர்கள் எல்லோரும் ஹிந்துக்கள் என்று கொள்ளுகிறோமா? சாதாரணமாக ஹிந்துவாக ஒருவன் பிறந்தாலன்றி அவன் ஹிந்துவாக மாட்டான் என்று கொள்ளப்படுகின்றது. பிறமதத்தில் பிறந்த ஒருவர் தாமும் ஹிந்துவென்று கொள்ளப்படவேண்டும் என்று கருதும் பக்ஷத்தில் அவரை நாமும் ஹிந்துவென்று கொள்ளல் வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். பம்பாயில் பிரஹ்மக்ஞான சபை அங்கத்தினர்களில் முதன்மையானவருள் ஒருவரான ஜி. பி. வைத்தியா என்பார் மேற்கூறியபடி அவாவினரை ஹிந்துக்களாகச்சேர்க்க வேண்டுமென்ற கொள்கையுடன் பம்பாயில் ஒருசபை சேர்த்திருக்கின்றனர். சென்ற ஜனவரிமீ 8உயன்று ஒரு பிரசங்கம் செய்ததாகவும் அப்பொழுது ஹிந்துக்கள் பலர் இந்நோக்கத்தை ஆதரித்து கடிதங்கள் எழுதியிருந்ததாகவும் தெரியவருகிறது.

*
* *

பிரஹ்மக்ஞான சபை பிரதம அக்கிராசனபதியான கர்னல் ஆல்காட் அவர்களும் மாதுஸ்ரீ பிளவாட்ஸ்கி அம்மாளவர்களும் ஹிந்துவாக வேண்டுமென்று விரும்பியிருந்ததும், அப்படி முடியாதென்று தெரிந்த பிறகு தான் பௌத்தமதத்தில் சேர்ந்தார்கள் என்பதும் யாவரும் அறிந்த விஷயம். இப்போது நமது அக்கிராசனபதி மாதுஸ்ரீ அன்னி பெஸண்டம்மையவர்களும் ஹிந்துவாகவே தம்மைக்கருதி, சகல விதத்திலும் ஹிந்துவாகவே இருந்து வருவதும் யாவரும் அறிவார்கள். இத்தகையவர்களை ஹிந்துக்களாகவே ஹிந்துக்கள் கொள்ளவேண்டுமென்பது மேற்கூறிய வைத்தியா அவர்கள் கருத்து. கிறிஸ்தவப் பாதிரிமார்கள் மாதிரியாக ஹிந்துவாக்குவதற்காக அவ்வளவு விசேஷ முயற்சிகள் செய்யாமல், தன்னுடைய மனப்பாங்காலும் ஆராய்ச்சியாலும், ஹிந்துவாக வேண்டும் என்று தீர்மானத்தையடைந்த ஒருவனை ஏன் நாம் ஹிந்துவாக கொள்ளக்கூடாது

என்று வினவுகிறார். இவ்விஷயத்தை நம்மவர்களும் ஆராய்ந்து பார்த்து, வைத்தியா அவர்கள் செய்யும்முயற்சி நன்முயற்சியெனத் தீர்மானம் கொள்ளுவோர் காரணங்களுடன் அவர்கள் துணிபை பத்திரிகைகளில் வெளியிடுவதும், மற்றவர்கள் இம்முயற்சி கூடாதென்று கொண்டால் அவர்கள் அபிப்பிராயத்தை பத்திரிகைகளில் காரணங்களுடன் வெளியிடுவதும் சிலாக்கியமாகும். ஏனென்றால் ஒருவனை ஹிந்துவாகச் சேர்க்கலாமா என்கிற தீர்மானம் ஹிந்துக்களின் அபிப்பிராயத்தாலாகவேண்டியதேயாம்.

* * *

இந்தியாவில் 72 லக்ஷம் பிக்ஷுகர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலர் வயிறு வளர்ப்பதற்காக பிச்சைக்காரர்களாக விருக்கிறார்களே யொழிய உலகத்தை துறந்த சன்னியாசிகளல்ல ரென்பது யாவரும் ஒத்துக் கொள்ளும் விஷயம். கூன், குருடு, நொண்டிகளையும், வயது முதிர்ந்து பொருள்தேட சக்தியற்றவர்களையும், கிருஹஸ்தர்கள் காப்பாற்றவேண்டியது கடமையாகும். எதிர்பாராமல் வந்த வழிப்போக்கனையும் வரவேற்று அன்னமிடுவதும் தர்மமாகும். ஆனால் பிச்சை யெடுப்பதே பிழைப்பாக உள்ளவர்களைக் காப்பாற்ற வேண்டுவது சரியா? ஜதை ஜதையாய் ஊர் ஊராய்ச் சென்று புருஷனும் ஸ்திரீயும் பிச்சைக்காரர்களாகவும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் பிச்சைக்காரர்களாகவும் பல்கிப் பெருகிவரும் சோம்பேறி ஜனங்களைப் போஷிப்பது தகுதியா? தர்ம சாஸ்திரங்களில் இத்தகைய பிச்சைக்காரர்களுக்கு உதவிசெய்யும்படி கூறவில்லை. பற்று அறுத்த துறவிகள் தேகயாத்திரைக்கு தேவையான நிமித்தம் சொற்ப ஆகாரத்தை மட்டும் பெற்று திருப்தியடைகிறார்கள். அவர்கள் சுயலாபம் கருதாமல், சதா லோகஹிதத்தை நாடி, கேட்போருக்கு சதுபதேசத்தைச் செய்துகொண்டு, தென்றல் உலாவுவது போல் உலாவி வருகிறார்கள். அம்மாதிரியே லோக சங்கிரஹத்திற்காக உழைத்துவரும் கடமை யுள்ளவர்களை ஜன

சமூஹத்தாரும் கிருஹஸ்தர்களும் காப்பாற்ற வேண்டு மென்பது சாஸ்திரக் கருத்தாகும்.

***

மேற்கண்டபடி யாதொரு கைங்கரியமும் செய்யமுய லாமலும் திடசரீரம் வாய்க்கப்பெற்றும், சோம்பேறித்தனத் தால் உழைக்காமலும் பிறர் இடும் பிச்சையால் காலங்கழிக் கும் ஜனங்கள் பூமிக்கு பாரம் எனில் பொருந்தும். இவர் களை சீர்திருத்தவேண்டும் என்றும், ஜனசமூக கைங்கரியம் செய்யும்படிக்கும் சமய முறைகளை கற்பிக்கும் படிக்கும் யோக்கியதை யடையும்படி செய்யவேண்டுமென்றும் விவே காநந்த ஸ்வாமிகள் எண்ணங்கொண் டிருந்தார்கள். ஆனால் அவர்கள் காலத்தில் அவ்வெண்ணம் நன்முய் நிறைவேற வில்லை. காசியிலிருந்துவந்த அத்புதானந்த ஸ்வாமிகள் ஆதிகிஷ்கிந்தை யென்ற ஹம்பி என்னும் ஸ்தலத்தில் தாம் ஒரு பாடசாலை ஸ்தாபித்து பிக்ஷுகர்களுக்கு தகுந்த கல் வியைப் புகட்டி அவர்கள்மூலம் இந்தியாவில் கல்வி பரவும் படி செய்யப் போவதாகவும் அவ்விதமே இதர க்ஷேத்திரங் களிலும் இத்தகைய பாடசாலைகளை ஸ்தாபித்து ஆங்காங் குள்ள பிக்ஷுகர்களைக் கொண்டு ஜனங்களுக்குள் கல்வி யைப் பரவச்செய்யலாம் என்றும், குத்தியில் ஜனவரிமீ 7ௗ பிரசங்கம் செய்தார்கள்.

***

இக்காலத்தில்கூட பர்மாவில் பௌத்த பிக்ஷுக்கள் தான் அந்தந்த கிராமங்களிலுள்ள வாலிபர்களுக்கு பிரத மக்கல்வி கற்பித்து வருகிறார்கள். அங்ஙனமே இந்தியாவில் ஏனைய பாகங்களிலும் ஏன் நடக்கக்கூடாது? மேற்கண்ட நோக்கம் கைகூடினல் இந்தியாவுக்கு மிகுந்த லாபம் உண் டாகும் என்பதில் ஐயமில்லை. இம்முயற்சியின் பயனை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

***

ராவ் சாஹேப் கலவால கண்ணன் செட்டியார் என்ற சென்னை வைசிய சிகாமணி பிப்பிரவரிமீ 4 தேதியன்று

மைலாப்பூரில் புதிதாக ஒரு சமஸ்கிருத காலேஜ் ஸ்தாபித்தார். விசிஷ்டாத்வைதத்தை கற்பிக்கவும் அத்துடன் ஆங்கிலத்தையும் தமிழ் பிரபந்தங்களையும் கற்பிக்கவும் ஒரு புதிதானகல்லூரி ஏற்படுத்த லவசியம் என்று கற்கும் மாணாக்கர்களுக்கு அன்னமும் இட்டு கல்வியும் கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். மதராஸ் சர்வ கலாசாலையில் சிரோமணி முதலிய பரீக்ஷைகளுக்கு இக்கல்லூரியில் மாணாக்கர்களை தயார்செய்வார்கள். இப்பள்ளியினின்றுவெளிவரும்மாணாக்கர்கள் இதர மதத்தாருடன் சண்டையிடாமல் ஒற்றுமையாயும் சமரச பாவத்துடனும் ஒழுகுபவராயும் இருத்தல் வேண்டும் என்பது இப்பெரும் கொடையாளியின் கருத்து தென் இந்தியாவுக்கு ஓர் திலகம்போல் விளங்கும் மாப்பெரும் கிழவராம் டாக்டர் ஸர். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் இந்நன்முயற்சியையும், இப்பெரும் கொடையாளியையும் ஆசிர்வதித்தார்கள். அவ்வமயம் மதராஸ் எக்ஸகியூடிவ் கவுன்சில் மெம்பராக புதிதாய் நியமிக்கப்பட்டிருக்கிற திவான் பஹதூர் பி. ராஜகோபாலாசார்யரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்.

***

நல்லோர் செய் நற்கருமங்களைப் பற்றி யெடுத்துரைப்பது உரைப்போனுக்கும் சந்தோஷத்தைச் செய்கின்றது. அதைக் கேட்போர்க்கும் நன்மை பயக்கின்றது. இந்த பெரும் கொடையாளியே செங்கற்பட்டு ஜில்லா திருவள்ளூரில் உள்ள ஹிந்து லோயர்செகண்டரி பள்ளிக்கூடத்தின் விசாரணையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதன் விசாரணைக்காக ஏற்பட்டிருந்த சபையார் அதை கொண்டு செலுத்த முடியாமல், இந்த கனவானை வேண்ட, அவ்வேண்டுகோளுக்கு இரங்கி அவ்விசாரணையை ஏற்றுக்கொண்டு, இப்பள்ளியை சீக்கிரம் ஹைஸ்கூலாகச் செய்யப் போகிறார் என்று கேட்க சந்தோஷப்படுகிறோம். மேலும் அதே நகரத்தில் ஹிந்துப்பெண்கள் பள்ளிகூடம் ஒன்றையும் புதிதாக ஸ்தாபிக்கப் போகிறாரும். இவரல்லவோ நம்முடைய

ஸநாதந தர்மத்தில் துலக்கிய பிரகாரம் வைசிய தர்மத்தை சரிவர நடத்தும் புண்ணியர்!

*
* *

ஆஸ்திரேலியாவுக்கும் கிழக்கே பிரிடிஷ் ராஜாங்கத்தாருக்குச் சேர்ந்த பிஜிதீவுகள் இருக்கின்றன. அங்கே பிரிடிஷ் ஜனங்கள் குடியேறி யிருக்கிறார்கள். விஸ்தாரமான தோட்டங்களை சாகுபடி செய்து அந்த தோட்டங்களின் சொந்தக்காரர்களுக்கு பெரும் லாபம் சம்பாதித்துத் தருவதற்காக அநேக வருஷங்களாக இந்தியாவிலிருந்து கூலியாட்களை கண்காணிகள் மூலம் சேர்த்து ஆயிரக்கணக்காக அவ்விடத்துக்கு அனுப்பி அவ்விடத்தில் தோட்டங்களின் அவசியத்துக்குத் தக்கவாறு தோட்டத்துக்கு இவ்வளவு பேர் என்று பிரித்து எடுத்துக்கொள்ளுவது வழக்கமாயிருக்கிறது. கூலிகளை சேர்க்கும் கண்காணிகளுக்கு தகுந்த வெகுமதி கொடுக்கிறதினால், அக்கண்காணிகள் பலவித மனாமோசங்களைச் செய்து இந்தியாவிலிருந்து அறிவில்லாத அநேகம் ஏழைகளை ஏமாற்றி கூட்டிப் போய் விடுகிறார்கள். பிஜிக்குப் போனால் வெகு சீக்கிரம் குபேரனாகிவிடலாம் என்ற ஆசைவார்த்தையால் அனேகர் ஏமாந்து போகிறார்கள். இப்படிப் போகிறவர்கள் எல்லாம் 20 வயது முதல் 30 வயதுக்குட்பட்டு ஆரோக்கியமும் திடகாத்திரமும் உள்ள வாலிபர்கள். 3 அல்லது 4 புருஷர்களிருந்தால் 1 ஸ்திரீ அவசியம் போகவேண்டுமாம். கப்பலில் பிரயாணம் ஆரம்பிக்கும்பொழுதே, ஸ்திரீ புருஷர்களுக்கு பிரத்தியேகமான இடம் இல்லாததால், ஸ்திரீகளுக்கு மானபங்கம் ஏற்படுகிறது. பிஜிதீவிலிறங்கினவுடன் கூலிகள் சம்மதமின்றியே ஸ்திரீ புருஷர்களைப் பிரித்தும் தோட்டங்களுக்கு அனுப்புகிறார்கள். அங்கே போய் கூலிகள் 5 வருஷ காலம்வரை உழைக்கவேண்டும். இந்த ஏற்பாட்டுக்கு "கூலி ஒப்பந்தம்" என்று பெயர். இதனால் இந்தியாவுக்கு பலகெடுதிகள் உண்டாகியிருக்கின்றன. சில காலத்துக்கு முன் தென் ஆப்பிரிக்காவில் நேட்டால், முதலிய இடங்க

ளில் இந்தியர்கள் ஒப்பந்தக் கூலிகளாய்ப்போய் பட்ட கஷ்டங்களை நம்மவர் கேட்டு இந்தியா முழுதும் ஒரே கூக்குரலாய் இந்த ஒப்பந்தத்தை நிறுத்திவிடவேண்டுமென்று இந்திய ராஜப்பிரதிநிதியை வேண்ட அக்காலத்தில் அப்பெரும் பதவியைப் பூண்டிருந்த லார்டு ஹார்டிங் பிரபு கூலி ஒப்பந்தமானது இந்தியாவுக்கு கெடுதி விளைவிக்கிறது என்றும் அதை நிறுத்தவேண்டும் என்றும் சென்னையில் கம்பீரமாக கோஷித்தார். அப்பால் கூலி ஒப்பந்த ஏற்பாட்டை அவசியம் நிறுத்தவேண்டுமென்று லண்டனிலிருக்கும் இந்தியா மந்திரிக்கு நிருபமும் எழுதினர். ஆகையால் கூலி ஒப்பந்தம் நின்றுபோய் விட்டது. இனிமேல் ஒப்பந்தக் கூலிகள் இந்தியாவைவிட்டு தென் ஆப்பிரிக்காவுக்காவது அல்லது வேறு எந்த இடத்துக்காவது அனுப்பப்பட மாட்டார்கள் என்று நாம் எல்லோரும் நம்பியிருந்தோம்.

*
* *

ஆனால் சென்ற ஜனவரிமீ ௳ த்தில் பிஜிதீவுக்கு இன்னும் ஐந்து வருஷகாலத்துக்கு ஒப்பந்தக் கூலிகள் அனுப்ப லண்டனில் ஏற்பாடு செய்திருப்பதாக பிஜிதீவுகளில் சொல்லிக் கொள்ளுகிறார்கள் என்றும், உண்மையைத் தெரிந்தே தான் அப்படிச் சொல்லியிருக்கவேண்டும் என்றும் ஸ்ரீமான் சி. எப். ஆண்ட்ரூஸ் என்ற ஒரு ஆங்கில உத்தமர் இந்திய பத்திரிகைகளில் எழுதி அந்தப்படி கூலி ஒப்பந்தம் இனி நடக்கா வண்ணம் இந்தியரும், மற்றவரும் பெருமுயற்சியெடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். இந்த உத்தமர் இங்கிலீஷ்கார பாதிரியாய் இந்தியாவில் வந்து இருந்தார். வந்தது முதல் இந்தியர்களிடம் விசேஷமாய் உண்மையான பேரன்பு பூண்டவர். சிலகாலம் சென்றபிறகு மதக்கோட்பாடுகளில் இவர் சிலவற்றை ஒத்துக்கொள்ளாததால் தான் பாதிரியாயிருக்க இஷ்டமில்லை யென்று அந்த பதவி வேண்டாம் என்று சொல்லி விலகிக்கொண்டார். ஆனால் கிருஸ்துவினிடம் உண்மையாய் பக்தி கொண்டவராகையால் இவரை கிருஸ்தவ சிரேஷ்டன் எனல் தகும். இவர் ஸர்

ரவீந்திரநாத் டாகோரின் சிஷ்யன். இப்போது அக்கவீந்திரரால் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் போலப்பூர் சாந்திநிகேதனத்தில் தான் ஸ்ரீமான் ஸி. எப். ஆண்டுரூஸ் இருக்கிறார். சில காலத்துக்குமுன்னர் இந்தியக்கூலிகளின் ஸ்திதி எவ்விதமிருக்கிறதென்று உண்மையை அறியுமாறு பிஜிதீவுகளுக்கு இவர் ஸ்ரீமான் பீயர்சன் என்ற மற்றொரு வருடன் போய் அவ்விருவரும் அவ்விடம் தாங்கள் பார்த்த விஷயங்களை புஸ்தக ரூபமாய் அறிக்கையிட்டிருக்கிறார்கள். ஆகையால் இந்தியக் கூலிகளுடைய ஸ்திதியைப் பற்றி பேச யோக்கியதையுள்ளவர்களில் ஸ்ரீமான் ஆண்டுரூஸ் முதன்மையானவர்.

*
* *

"இனி ஒரு நாள்கூட கூலி ஒப்பந்தம் நடை பெறக் கூடாது" என்று இந்தியாவில் ஒவ்வொரு நகரத்திலும் மகாநாடுகள்கூடி தீர்மானங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சென்னையில் ஜனவரி ௴ 30உயன்று மதராஸ் லார்டு பிஷப் என்ற கிருஸ்தவர்கள் அதிபதியும் ஸ்ரீமான் லீத் என்ற கிருஸ்தவ பாதிரியும் இந்த தீர்மானத்தைப் பற்றி பேசினார்கள். ஸ்ரீமான் ஆண்டுரூஸ் அவர்களும் பேசினார்கள். அதேமாதிரி மதுரையிலும் 31ஆம் தேதி யன்று பெரியசபைகூடி அதே தீர்மானம்கொள்ளப்பட்டது. இம்மாதிரியே இதர நகரங்களிலும் நடந்திருப்பதாக பத்திரிகைகள் மூலம் அறிகிறோம்.

*
* *

பிஜிதீவுகளில் 3 அல்லது 4 கூலிகளுக்கு ஒரு ஸ்திரீ விகிதம் இருப்பதாலும், ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் நல்ல வாலிப பருவத்திலிருப்பதாலும், ஸ்திரீகள் விஷயமாய் அடிக்கடி கொடிய விரோதங்கள் நேரிடுகின்றன. சில தோட்டங்களில் யாதொரு வியவஸ்தையும் இன்றி புருஷர்கள் நினைத்த ஸ்திரீகளிடம் செல்லலாம் என்றிருப்பதால் அங்கே மிகுந்த கலகங்களும் தற்கொலைகளும் நடக்கின்றனவாம். ஆனால் தோட்டச் சொந்தக் காரர்களில் கொஞ்சம் நல்லவர்கள் மாற்சரியத்தையும், சச்சரவுகளையும் குறைக்க எண்ணி மூன்றல்லது நான்கு குறிப்பிட்ட புருஷர்கள் குறிப்பிட்ட

(395-ஆம் பக்கம் பார்க்க)

இல்லற தருமம்

(343-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழகுமிடம்:—பெண்கள் தாம்சேர்ந்து பழகுமிடமும் தம்மினும் பன்மடங்கு பான்மை மிக்கதாயிருத்தல் வேண்டும். தாம் நட்புக்கொள்ள விரும்பும் பாங்கியரை தம்மை யொத்த அல்லது தம்மினுயர்ந்த (அல்லது சிறிதேனும்) கல்வி யறிவுடையராவென்றும் நல்லிணக்க முடையவரா வென்றும் நல்லொழுக்கம் நற்குணங்கள் பொருந்தியவரா வென்றும், இன்னும் அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளற் பாலன யாவையும் முன்னர் நன்காராய்ந்து தெளிந்த பின்னரே அவரோடு சினேகித்தல் பொருந்தும்.

தலையணை மந்திரம்:—சிலர், நாயகரிடத்து தம் கணவற் பெற்றோரைப் பற்றியும், தமக்கு வெறுப்பான மற்றோரைக் குறித்தும் வஞ்சித்துப் புறங்கூறுவதும் தலையணை மந்திரோபதேசஞ் செய்வதுமுண்டு. இங்ஙனம் இத்தகைய மந்திரத்தைக் கணவர் காதிலூதும் காரறிவுடைய காரிகையரே

'தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கையார் எனப் பெரியோ

ராற் பாடப்பெறுவார். இவ்வுபதேசம் பெற்ற ஆடவரும் தம்மை இதுகாறும் வருந்தி வளர்த்துப் பரிபாலித்து தமக்குச் செய்யவேண்டிய சுபகாரியங்களெல்லாம் நிறைவேற்றி வைத்த பெருங்கருணை பூண்ட பெற்றோர்களிடத்தும், இன்னும், தம்மனைவியரால் வெறுக்கப்பட்ட ஏனைய சுற்றத்தாரிடத்தும் சண்டையிட்டு, அவர்களைத் தூடித்தும் விரோதித்தும் அக்குடும்பத்தை யிரண்டாக்கித் தாய்தந்தையரை வெருக்கி அவர்களை அன்னவத்திரமாதிகளுமீயாது துன்புறுத்தித் தாமும் தம்மனைவியருமாகத் தனியிருந்து வாழ்கின்றனர். இவ்வாறு பெற்றோரை நீக்கிப் பிரிந்து

வாழுங் கன்னெஞ்சப் பேதையர் வாழ்க்கையால் உலகப் பழிபொருபால் நிற்க, ஆதியாரம்பத்திலஃது சுகமாகத் தோற்றினும், இறுதியில் எத்துணைப் பெருந் தீங்குகளை யிழைக்கவல்ல தென்பதையும் அவர் உணர்ந்திலர்.

ஆஹா! தலையணை யுபதேசமாகிய இம்மந்திரம் எவ்வளவு கெடுதிகளை விளைவிக்கும் சக்தியுள்ளதென்று சிந்தியுங்கள். ஆதலால் ஓர் மாண்புடை மனையாட்டி இம்மந்திரோபதேசத்தைச் சிறிதும் கையாளாமலும்ஓர் மாண்புடை மணாளன் அம்மந்திர சத்தி மேலேறி விடாமல் தனை யெதிர்த்தடக்கித் தூரத்தில் நிற்கும் வன்மையுடையோனாகவுமாகுக.

மேற் கோள்கள்:—இன்னும், பத்தாவுக்கேற்ற பதிவிரதைகளாயிருந்த பத்தினிப் பெண்டிர்களின் கதைகள் யாவற்றையும் எடுத்துரைக்கப்புகினவை பலவாய்ப்பல்குமாதலால், அத்தெய்வத் தன்மைப் பொருந்திய கதைகளையுமவற்றினுட் பொதிந்த நீதிகளையும் நன்கு தெரிந்து ஸ்ரீராமரிடத்துச் சீதையும், பாண்டவரிடத்துத் திரௌபதியும்அரிச்சந்திரனிடத்துச் சந்திரமதியும், நளனிடத்துத் தமயந்தியும் நடந்துகொண்டாற்போலத் தம்கணவன்துன்புறத்தாமதுன்புற்றும் இல்வாழ்க்கையை இயல்புறநடாத்துமவரே வாழ்க்கைத் துணையாவார்.

குறிப்பு:--இவ்வுலகம் ஓர்பெரிய சமுத்திரத்தினிக்கரை மேலுலகம் இச்சமுத்திரத்தின் அக்கரை. நாம் யாவரும் அக்கரையிலிருந்து ஈங்கு நாம் செய்யவேண்டிய யாவோ சில கடமைகளை யெல்லாம் முடிவு செய்துவிட்டுத் திருப்புதற் பொருட்டு இக்கரைக்குப் பரமகருணாநிதியாகிய அப்பரம் பொருளினின்றும் பிரிந்து வந்துளோம்

தன் சொந்த ஊரைவிட்டுச் சில காரியங்களை முன்னிட்டு மற்றோரயலூர் சென்றானொருவன் தனது காரியங்களை முற்றுவித்த உடனே தன்னூர் புகமுயல் கின்றானல்லனோ!

அவ்வாறே இக்கரையாகிய இவ்வுலகிற்கு வந்த நாம் அக்கரையாகிய அருள் வெளியுலகை யடையும் காலமொன் றுண்டன்றே! ஆதலால் அக்கடற் பிரயாணத்திற் கின்றிய மையாதனவாகிய சாதனங்களெல்லாம் தேடுதற் கேற்ற நிலை இவ்வில் வாழ்க்கையேயாம். இச்சமுத்திர யாத்திரை யில் நம்மெதிர்ப்படும் பற்பல புயற்கால்கள் முதலிய விடை யூறுகளினின்றும் நம்மைக் காத்துக்கரை சேர்ப்பது மரக்கல மல்ல. பின்னேதுவெனில் நாம் இல்வாழ்க்கையினின்றும் சிறிது சிறிதாக வீட்டிச் சேர்த்ததோர் அறக்கலமேயென்க

முடிவுரை:— ஆகையால் இத்தகைய சிறப்பு வாய்ந்த இவ் வில்லறதருமத்தைக் கைப்பற்றினர், கைப்பற்றுபவர் யாவரும் ஒன்றியமனமுடையராய் இவ்வறத்திற் குரிய தரு மங்களிற் சிறிதும் வழாது செம்மை பெற நடாத்தி எல் லாம் வல்ல இறைவனருளைப் பெற்று இனிது வாழ்வார்க ளாக.

தி. எம். மொகையதீன் கவிராயர்
உதவித் தமிழ்ப் பண்டிதர், மதனபள்ளி காலேஜ்.

நன்மொழி

யஸ்மாத் த்ரயோऽப்யாஶ்ரமிணோ
ஜ்ஞாநேநாந்நேந சாந்வஹம் ।
க்ருஹஸ்தேநைவ தார்யந்தே
தஸ்மாஜ்ஜ்யேஷ்டாஶ்ரமோ க்ருஹீ ॥

மற்றெல்லா ஆசிரமிகளையும், கிருஹஸ்தனானவன், மனதிற்கும் சரீரத்திற்கும் உணவளித்து ஆதரிக்கிறபடியால், இவனே எல்லா ஆசிரமிகளுக்குள்ளும் மேலானவன்.

மநுஸ்மிருதி, iii—78.

பிரஹ்மக்ஞான தரிசனம்.

15-வது அத்தியாயம்.

(மந்திரவித்தை தொடர்ச்சி)

ஆரம்பத்தில் இவ்விருமார்க்கங்களும் ஒன்றுக்கொன்று மிகவும் சமீபமாகவும் ஒரே மாதிரியாகவும் இருப்பதினால் நாம் தவறி கெட்ட மார்க்கத்திற் செல்லாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். தைவீக மார்க்கத்தை நாம் அனுசரிக்கவேண்டுமானால் நம்முடைய எண்ணங்களையும் இச்சைகளையும் செய்கைகளையும் மற்றவர்கள் விஷயமாய் நம்முடைய மனோவிகாரங்களையும் நன்றாய் கவனிக்கவேண்டும்.

ஒவ்வொருவரும் தன்னை ஒரு தவறாத சோதனைக்குட்படுத்திக் கொள்ளவேண்டும். அதாவது "நான் இதைச் செய்வதால் எவருக்காவது தீங்குண்டாகுமா? நான் இக்காரியத்தைச் செய்தால் என் தோழர்களிடம் எனக்கு அன்பு உண்டாகுமா? அல்லது பகையுண்டாகுமா? அக்காரியம் நான் அன்புடனிருக்கவும் பிறர் என்பேரில் அன்பு பாராட்டவும் உதவுமா?" இவ்விதம் தன்னைத் தானே கேட்டுக் கொள்ளவேண்டியது. இக்கேள்விகளின் மூலம் ஒருவன் வேறொருவனுக்குத் தீங்கு செய்கிறதில்லையென்றும் சகல ஜீவர்களிடத்திலும் தனக்கு அன்பே பெருகுகிறதாயும் தெரிந்து கொண்டால் அவன் சரியான மார்க்கத்திலிருப்பதாக அறியலாம்.

வேறொருவனுக்கு என்ன கஷ்டம் வந்தாலும், தனக்கு உரித்தானதை யடைய மேனமேலும்முயற்சிசெய்துகொண்டும், அதற்கிடையூறாயிருப்பவர்களையும் அல்லது அவ்விஷயத்தில் தனக்கு மேற்போனவர்களைப் பகைத்துக்கொண்டும் ஒருவன் இருப்பானாகில், அவன் தப்பிதமான மார்க்கத்திலிருப்பவன். ஆகையால் இவன் உடனே சரியான மார்க்கத்தில் திரும்ப வேண்டியது அவசியம்.

மந்திர வித்தையைப் பற்றின ஒவ்வொரு பிரஹ்மஞான புஸ்தகமும், சநாதன ஞானத்தை போதிக்கிற ஒவ்வொரு நிஜமான குருவும் நாம் சுயநயம் பாராட்ட ஆரம்பிக்கும் போதே அதைத் தடுக்கவேண்டுமென்றும் நம்முடைய சொந்தப் பிரயோசனத்துக்காக மந்திர சக்தியை உபயோகிக்கக் கூடாதென்றும் எச்சரிக்கிறதைக் கவனிக்கவேண்டும். நாம் மந்திர சக்திகளையடைய வெகுகாலம் செல்லலாம். ஆனால் என்றைக்காவது ஒரு நாள் நாம் அடைவோம் என்பது சித்தம். ஆகையால் ஆரம்பம் முதல் தவறுதலினின்று நம்மைக் காத்துக்கொள்வதே அறிவாம்.

ஏசு நாதரிடம் மந்திர சக்திகளிருந்தன. மற்றெல்லா விஷயங்களிலும்போல இவ்விஷயத்திலும் அவர் நமக்கு உதாரணமாயிருக்கிறார். அவர் கல்லை அன்னமாக்கி ஐயாயிரம் ஜனங்களின் பசியைத் தீர்த்தார். தண்ணீரை திராக்ஷ ரசமாக்கி விவாகத்துக்கு வந்த விருந்தினரின் தாகத்தைத் தீர்த்தார். அப்படி யிருந்தும் அவர் பசியால் வருந்தும் போது தனக்காக தன் மந்திர சக்தியால் கல்லை அன்னமாக்கிக் கொள்ளவில்லை. அப்படிச் செய்து கொள்ளுவதினால் ஒருவருக்கும் தீங்கு நேரிடாதென்பது நிச்சயமாயிருந்தாலும் ஆசுர மந்திரவாதிகளுக்கு அரசனான சாத்தான் இவரை அடிக்கடி தூண்டினபோதிலும் இவர் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் இவருக்கு தைவீக மார்க்கத்தின் விதிகள் நன்றாய்த் தெரியும். அம்மார்க்கத்தில் நாமெல்லாரும் செல்லும்படியாய் அவருடைய அடிச்சுவடுகளைப் பதித்திருக்கிறார்.

பரிசுத்தமான எல்லா மகான்களும் நாம் ஜயிக்கவேண்டியதாயுள்ள சகல விஷயங்களையும் ஜயித்துவிட்டார்கள். அவர்கள் செய்யாத எந்தக்காரியத்தையும் நம்மைச் செய்யச் சொல்லுகிறதில்லை. நாம் பரார்த்த இரசவாத சக்தியால் சகல காரியங்களையும் செய்யக் கூடுமென்று அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் அவ்வித்துக்கள் நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் புதைந்து கிடக்கின்றன. நாம் அவைகளைப் பரிபாலனம் செய்யத் தயாராகவும் இஷ்டமுள்ளவர்

களாகவுமிருக்கும்போது அவ்வித்துக்கள் மந்திர சக்திகளாக வளரும்.

தைவீக மார்க்கத்தின் முடிவில் எல்லாரும் தைவீக மந்திரவாதிகளாக ஆகின்றார்கள். அவர்கள் பரிசுத்தமென்ற ஜ்வலிக்கிற வெண்மையான வஸ்திரம் தரித்தவர்கள். அவர்களின் சிரசு பொன்னிறமான பரிவேஷத்தால் (halo) சூழப்பட்டிருக்கும். அப்பரிவேஷமானது சுயங்யம்பேணும் ஒவ்வொரு எண்ணத்தையும், இச்சையையும், சுத்த ஞானமாகவும், அன்பாகவும் மாற்றின, விக்ஞானத்தின ஸ்வபாவமான அடையாளமாம்.

அம்மகான்கள் தான் நமது மூத்த சகோதரர்கள். அவர்கள் மிகவும் நல்லவர்களாகவும் வல்லமையுள்ளவர்களாகவுமிருப்பதால் பிரகிருதியிலுள்ள மறைவான தத்துவங்களெல்லாம் அவர்களிடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கின்றன. ஏசுநாதர் செய்ததுபோல் அவர்கள் கொந்தளிக்கிற சமுத்திரத்தை சாந்தப்படுத்துவார்கள். மலைகளை அப்புறப் படுத்துவார்கள். இவ்வுலகத்திலுள்ள எந்த இடத்திற்கும் ஒரு நிமிஷத்திற் போவார்கள். கதவுகளும் ஜன்னல்களும் அடைபட்டிருந்தபோதிலும் உள்ளே பிரவேசிப்பார்கள். ஏனெனில் அவர்கள் எல்லாரிடத்திலும் அன்புள்ளவர்கள். அதனால் அதிக சக்தியுள்ளவர்கள். ஒன்றுக்கும் அஞ்சாதவர்கள். பரிசுத்த அன்பிற்கு பயமேது?

காட்டிலுள்ள ஜந்துக்களும் விஷமுள்ள சர்ப்பங்களும் மாம்சம் பக்ஷிக்கும் மிருகங்களும் ஒரு மகானை அறிந்து நேசிக்கும். நாம் வளர்க்கும் பூனை நமது கால்களில் விழுந்து புரளுவது போல் சிங்கங்களும் புலிகளும் அவர் காலில் விழுந்து புரளும். அன்பே உருவமாயிருக்கிற ஒரு மகானுக்கு ஒருவனும் தீங்கு செய்ய முடியாது. அவரும் யாதொருவருக்கும் தீங்கு செய்தார்.

"கடவுளுக்குப் பயந்து நடப்பது ஞானத்திற்கு ஆரம்பம்" என்று கிறிஸ்தவ வேதபுஸ்தகத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. முடிவானது அன்பாம். பூர்த்தியான அன்பானது பயத்தைப் போக்கும்.

வி. வெங்குஸ்வாமி ஐயர்.

கீதா வாக்கியங்கள்.

(355-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மனிதனுக்குப் பிறவிமுதல் ஏற்படும் கடமைகள் அல்லது கடன்கள் தேவரிணம் பித்ருரிணம், மனுஷ்யரிணம் என்று நம் முன்னூல்களில் விவரிக்கப் பட்டிருக்கின்றது. தேவர்களுக்கு நாம் செய்யவேண்டிய பூஜை, யக்ஞம் முதலான கடமைகளைத் தேவர் கடன் என்றும், நமது பித்ருக்களுக்கு நாம் செய்யவேண்டிய சிராத்த தர்ப்பணாதிகளை பித்ருக்கள் கடன் என்றும், நமது சமூகத்தைச் சார்ந்த மனிதர்களுக்குள் நாம் பரஸ்பரம் செய்து கொள்ளவேண்டிய கடமைகளை மனிதர் கடன் என்றும் சொல்லுவார்கள். முதல் இரண்டு வகைக் கடன்களையும் நாஸ்திகர் அங்கீகரிக்கமாட்டார்களாயினும், மனிதர் கடமைகளைக், கொஞ்சமேனும் புத்தியும் பகுத்தறிவும் வாய்ந்த சகல மதஸ்தர்களும் அங்கீகரிக்கவே செய்வார்கள். ஆதலால் முற்கூறியவாறு கர்மம் என்னும் சொல்லின் முதன்மூன்று பொருள்களைப் பற்றி அபிப்ராய பேதங்களிருப்பினும் அச்சொல்லின் நாலாவது பொருளாகிய கடமை என்பது ஒன்றுண்டு என்பதைப் பற்றி அபிப்ராய பேதமே இல்லை.

மேற் கூறியவாறு கடமை என்பது ஒன்றுண்டென்று அங்கீகரித்தபோதிலும் சில சமயங்களில், எது செய்யத் தக்கது அல்லது செய்யத் தகாதது என்பதில் ஐயம் ஏற்படுவதுண்டு. வயோதிகரான தாய் தந்தையரை உயிருடனேயே சமாதியில் வைக்கவேண்டியது ஸத்புத்திரன் கடமையென ஓர் கொள்கை ஒரு தீவில் இருக்கின்றதாம். அதே கொள்கையை பிதிருஹத்தி யென்ற பாமபாதகம் என நாமெல்லோரும் நிந்திப்போம். இதில் யார் சொல்லுவது சரி, யார் சொல்லுவது தவறு? . விதவா விவாஹம் செய்யவேண்டுமென்பார் சிலர். 'கூடாது. அவர்கள் அழகைக் குறைக்க வேண்டும்' என்பார் வேறு சிலர். ஸ்திரீகளுக்கும் ராஜாங்க

ஸ்வாதந்திரியம் சமமாய்க்கொடுக்கவேண்டுமென்பார் ஒருதேசத்தில், அது கூடாது என்பார் மற்றொரு தேசத்தில். அடிமைகள் வியாபாரம் கூடாதென்பார் ஒரு தேசத்தார். அடிமைகள் என்ற பெயரை மாற்றிக் கூலிகள்என்ற பெயரிட்டு, விலைக்குக் கொள்ளப்பட்ட அடிமைகளினும், மிருகங்களினும் கேடாய் வேலை வாங்குவது தர்மம் என்று வாதிப்பார் மற்றோர்.

தர்மமே பலம் என்பார் சிலர். பலமே தர்மம் என்பார் பாஹு பலத்தால் கர்வங்கொண்ட சிலர். இவ்வாறு எண்ணிறந்த உதாரணங்கள் கூறலாம். இவைகளிலெல்லாம்,எது சரி, எது தவறு என்று கூறுவது எப்பொழுதும் சாத்தியமில்லை. ஆயினும், இப்படிப்பட்ட அதீதமான விஷயங்களில் தவிர நாடோடியான மற்ற விஷயங்களில் சரி இன்னது, தவறு இன்னது என்று விவஹாரதசையில் பெரும்பான்மையோரால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றது. சரி, இன்னது, சரித்தப்பு இன்னது என்பது பாரமார்த்திகமா (absolute) என்பது பலவித ஆக்ஷேபணைக்கு இடமாகின்றது. இவ்விதத் தர்ம சங்கடம் (conflict of duties) உலக வாழ்வில் பலமுறை ஒவ்வொருவனுக்கும் ஏற்படுவது சகஜம். அஃதைக் காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறே ஒவ்வொருவனும் தன் தன் புத்தித் திறமையால் ஊஹித்து நடந்துகொள்ளவேண்டும். இவ்வித மஹா விசாரணையில் தலையிடுவது ஓயா விசாரணையாய்விடும். ஆயினும் நமது பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவான் அப்படிப்பட்ட தர்ம சங்கடங்கள் சிலவற்றை எடுத்து அவைகளை ஒரு விதமாய் விதாயம் செய்திருக்கிறார். அவைகளில் முக்யமானது போர்வீரன் கடமையைப் பற்றியது. க்ஷத்ரிய தர்மப்படி தன் பந்துக்களாகிய கௌரவர்களைக் கொல்லுவதா அல்லது பாந்தவ தர்மப்படி யுத்தகளத்தில் வில்லை எறிந்துவிட்டுச் சந்நியாசம் பெற்றுச் செல்லுவதா என்பதே அதைப் பற்றிப் பின் ப்ரகரணங்களில் விவரிக்க முயற்சி செய்யப்படும்.

இந்த ப்ரகரணத்தின் ஆதியில் கண்ட மஹா வாக்ய மானது "கர்மம் செய்தால் தானே நற்செய்கை துர்ச் செய்கை என்ற வித்யாஸம் ஏற்பட்டு அதற்குத் தக்க பல னையும் கர்த்தா அடைகின்றான். செய்யாமலே இருந்து டால் என்ன?" என்ற கேள்விக்கு விடையாகும்.

கப்பலில் உள்ள மாலுமி 'நான் சும்மா இருக்கிறேன்.' என்று சொல்லும் பேதமை போலாகும். அவன் சும்மா இருந்தாலும், சமுத்திர அலைகளால் தள்ளுண்டு, புயல்க ளின் கதிகளுக் குட்பட்டுக் கப்பலானது தத்தளித்துத் தன் படியே செல்லுமே ஒழிய மாலுமி சும்மா இருக்கிறானே, நா னும் சும்மா அசைவற்றிருக்கிறேன் என்றிருக்குமா?

தப்பித்தவறிக் கப்பல் ஏகதேசத்தில் கரை சேர்ந்தா லும் சேரலாம். அநேகமாய் அது பாறை முதலான விபத் துக்களுக் கிரையாகவே போய்விடும். மாலுமியின் கடமை யென்னவென்றால், சரியோ சரித்தப்போ கப்பலில் ஏறிவிட் டான், தன்னாலியன்றவளவு தன் புத்தித் திறமையால் கப் பலைச் சரியான வழியில் நடத்திக் கரை சேர்க்க முயற்சிக்க வேண்டியதல்லவா?

அதே மாதிரிதான் மனித வாழ்வும். சும்மா இருக்க முடியாது. ஏதாவது ப்ரவிர்த்தி செய்தே தீரவேண்டும். இவன் செய்யாவிடினும், இவன் வருதிக்குட் படாது யந்தி ரம்போல இவன் ப்ரக்ருதி குணங்களே வேலை செய்யும். அவைகளைத் தன் புத்தியென்னும் கடிவாளத்தால் அடக்கி யாளாவிடின், திமிர் பிடித்த குதிரைகளைப்போல இவனைக் கெட்டவழிக் குட்படுத்திவிடும்.

Satan finds some mischief for idle hands to do.

"சும்மா விருப்பவன் கை ஏதாவது விஷமம் செய்து கொண்டேயிருக்கும். இதுதான் சாத்தன் செயல்."

ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர்,
பி. ஏ., பி. எல்.

வாய்மை.

வாய்மையாவது உள்ளது கூறுதல். வாய்மை, மெய்ம்மை, உண்மையென்பன ஒரே பொருளுள்ள சொற்கள். இதனையே ஸத்தியமென்றும், யதார்த்தமென்றுங் கூறுவர். இது பொய்ம்மைக்கு எதிரிடையானது. மனிதர்க்கு வாக்கினால் உண்டாகுங் குற்றங்களில் பொய்யே முதன்மையானது. அதுபோல வாக்கினால் உண்டாகும் நன்மைகளில் மெய் முதன்மையானது. ஸத்தியமானது எல்லாத் தருமங்களினும் உயர்ந்ததென்பது ஆன்றோர் கொள்கை. ஸத்தியமென்பது இல்லையாயின் உலகியல் நடைபெறாது என்று நாம் சொல்லத் துணிகிறோம். பிறருக்கு நன்மை செய்வது புண்ணியமென்றும், தீமை செய்வது பாவமென்றும் பொதுவாக அறிந்துகொள்ளலாம். மனிதர்கள் பிறருக்குத் தீங்கு செய்யும் கருத்தினாலே பொய் சொல்லுகிறார்கள். அது, சொல்லுகிற தனக்கும் தீங்கு விளைக்கிறது. ஸத்தியம், தனக்கும் பிறர்க்கும் நன்மை விளைக்கிறது. தண்ணீர் உடம்பழுக்கைப் போக்குவதுபோல் ஸத்தியமானது மன அழுக்கைப் போக்குமென்றும், தீபமானது வெளியிருளை யோட்டுவதுபோல், அது அகவிருளாகிய அஞ்ஞானத்தை யோட்டி ஞானத்தை உதிக்கச் செய்யுமென்றும் கூறுவர்.

இனி, வாய்மையென்பது வாக்கின் மாத்திரமன்றித் திரிகரணத்திலும் சம்பந்தப் பட்டிருக்கவேண்டும். மனம் நினைக்கிறபடி சொல்லவேண்டும். அதனையே செய்தல்வேண்டும். "மனத்தொடு வாய்மை மொழியின்," என்றும் "உள்ளத்தாற் பொய்யா தொழுகின்" என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார். "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்று ஒரு பெரியவர் கடவுளை வேண்டிக் கொள்கிறார் உள்ளும் புறமும் வேறு பட்டிருப்பவர் பொய்யரே யன்றி வஞ்சகருமாவர். அவர்கள் தாம் செய்யுங்குற்றங்களைப் பிறரறியாமல் மறைக்க

எண்ணுகின்றார்கள். எல்லாச் சடசித்துக்களிலும் கலந்து எவற்றையும் அறிந்துகொண்டிருக்கிற கடவுளறியா வண்ணம் அதனை மறைக்க முடியாதென்று அவர்கள் எண்ணுவதில்லை. பெரியோர்கள் ஒருக்கால் தவறி ஒரு குற்றம் செய்துவிடுவார்களாயின் அதனைப் பிறர் அறியமாட்டாரென்று எண்ணாமல் தமது குற்றத்திற்குத் தாமே சாக்ஷியாக நின்று, அதற்குரிய தண்டனையையும் தாமே விதித்துக்கொள்வார்கள். அவ்வாறே பாண்டிய மன்னருள் ஒருவன் செய்திருக்கின்றான. 'தீமைசெய்தாய் போற்செங்கை குறைத்தாய்'' என்று திருவிளையாடற் புராணத்தும்,

"எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்கு கரியாவான் தானாய்த் தவற்றை நினைத்துத்
தன்கை குறைத்தான் தென்னவனும் காணார்
எனச் செய்யார் மாணுவினை" என்று

பழமொழியிலும் இக்கதை குறிக்கப்படுகிறது.

ஒருவன், கானலை நீரென்று அறிதல்போல ஒன்றை மற்றொன்றாக அறிந்து தான் அறிந்தபடி சொல்வானாயின் அது அவனளவில் உண்மையே. இங்கு அவனறிவு பொய்யறிவாயினும் அவன் தான் அறிந்தபடி வஞ்சகமின்றிச் சொல்லுகின்றான் ஆதலின், அப்புண்யத்தால் மனமாசு நீங்கி உண்மையறிவும் உதிக்கப் பெறுவான். ஆனால் அவன் தானறிந்ததே மெய்யென்று அநுபவமில்லாமலே சாதிக்கப் புகுதல் பிழையாகும். ஒருவன் யாதேனுமொன்றை உள்ளனவாறு அறிந்து, அறிந்தபடி சொல்லினாலும் அவன் கருத்து, பிறர்க்குத் தீமை புரியாமையிலும் நன்மை புரிதலும் பொருந்தியிருந்தால் மாத்திரம் அது வாய்மையாகும். இவ்வுண்மை,

"வாய்மை யெனப் படுவதியாதெனின் யாதொன்றும் தீமையிலாத சொலல்"

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்" என்று தெய்வப்புலவரான திருவள்ளுவரால் விளக்கப்பட்டிருக்கிறது. இப்

பாடல்களின் கருத்து பிறர்க்குத் தீங்குண்டாகும் நடந்ததனைச் சொல்லுதலும், நன்மை யுண்டாகாத நடவாததைச் சொல்லுதலும் பொய்யாம். பிறர்க்குத் தீங்கு உண்டாகாத நடந்ததைச் சொல்லுதலும், நன்மை யுண்டாகும் நடவாததைச் சொல்லுதலும் மெய்யாம் என்பது. ஒருவன், பிறர்க்கு நன்மை கருதி நடவாத ஒன்றைச் சொல்லுங்கால் அதனல் அவர்க்குண்டாவது குற்ற மற்ற நன்மையாவென்று பார்க்க வேண்டும். அப்பொழுது நன்மைபோல்தோன்றி, பின் பெரிய துக்கத்தை விளைக்குமாயின் அது நன்மையாகாது. அது பற்றியே 'புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்ருர். எல்லோராலும் அது அறிதல் அருமையாகையால் பொதுவாக நடந்தது கூறவே உண்மை என்று கொள்ளப் பட்டு வருகிறது. என்றுலும் எல்லாத் தருமங்களும் பிறர்க்கு இதஞ் செய்தலையே சார்ந்து நிற்கின்றன.

கிருபா சமுத்திரமாகிய கடவுள் ஸத்தியஸங்கல்பராக விருக்கிருர். ஜீவர்களின் இருவினைப் பயன்களை அவர்களே பிறழாமல் அநுபவிக்கச் செய்வது கடவுளின் ஸத்தியமான போக்கை விளக்குகிறது. அவரது வரம்பற்ற கருணையாலும் ஸத்தியத்தை மாற்றுதல் கூடாதாகின்றது. இத்தகைய பெருமை வாய்ந்த ஸத்தியத்தினின்றும் வழுவாமையையே விரதமாகப் பூண்டு அதில் உறைத்து நின்ற பெரியோர்கள் பலர் இத்தேயத்திருந்திருக்கின்றனர். அவருள் சூரியகுலதிலகனை அரிச்சந்திர மகாராஜன் தனக்குப் பரிசோதனையாக நேர்ந்த எத்துணைத் துன்பங்களையும் பொறுத்து ஸத்தியத்தை நிலைநிறுத்தின பெருமையை இவ்வுலகம் எக்காலத்திலும் மறத்தல் கூடுமோ?

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனி நமக்குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலம்"

என்ற அவரது தீரத்தை யாவரால் புகழமுடியும்? சொல்லொன்ருே? அவரது ஒழுக்கம், சிந்தனை, அறிவு, அநுபவம் ஆகிய எல்லாம் ஸத்தியத்தின் பாற்பட்டன.

பொய்யாமை அல்லது வாய்மையானது இவ்வுலகில் புகழை நிறுத்துகிறது. மறுமைக்குச் சாதனமான ஏனை எல்லா அறங்களையுந் தருகிறது. மனவிருளைப் போக்கி மெய்ஞ்ஞானம் உதிப்பிக்கிறது. இத்தகைய சிறந்த குணத்தை யடைவதற்குப் பழக்கமே சிறந்த கருவியாக விருக்கிறது. விளையாட்டிலேனும் பொய்சொல்லுதல் குற்றமே. நம் முன்னோர் பொய் சொல்லுதலை மாபாதகங்களுள் ஒன்ருக வைத்து எண்ணியுளர். தருமபுத்திரர், கண்ணபிரான் கட்டளைப்படி ஒருகால் சிலேடையாகக் கூறிய பொய்க்கும் பயன் அநுபவித்துளாரென்று பாரதங் கூறுகிறது. ஆதலால் குழந்தைப் பருவந்தொட்டே எவரும் பொய்யினைக் கடிந்து மெய் சொல்லிப்பழகி வரவேண்டும். பெற்ருேர்கள் தம் இளங் குழந்தைகளுக்குத் தாமே பொய்யான வற்றைச் சொல்லிக் கற்பித்து விடுகிருர்களே. இது எவ்வளவு கெடுதலான காரியம்? அன்றியும் பெற்ருேர்கள் தம் குழந்தைகளையும், உபாத்தியாயர்கள் தம் மாணுக்கர்களையும், எஜமானர்கள் தம் வேலைக்காரர்களையும் தாம் நடத்துகிற கொடூரமான மாதிரிகளாலும் அவர்களைப் பொய் சொல்லுதற்குத் தூண்டி விடுபவராகின்றனர். ஒரு குற்றத்தைத் திருத்தப் புகுந்தவர் வேறு பெரிய குற்றத்திற்கும் ஆளாக்குவது விவேகமாகுமா? ஆதலால் எவரும் அன்பையே ஆதாரமாகக் கொண்டு தமது இனிய உபதேசங்களினுல் பிறரைத் திருத்துவது நலமாகும்.

"யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற" திருவள்ளுவர்,

மு. வெங்கடசாமி நாட்டார்,
நடுக்காவேரி.

மீராபாய்.

(353-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 3. களம் 6.

காலம்:—இரவு. **இடம்:**—கும்பாஜி ராணாவின் அரண்மனை. **நாடகபாத்திரர்கள்:**—கும்பாஜி, மந்திரி.

கும்—வயதோடு உமது புத்தியும் போய்விட்டதோ?

மந்—அரசே, தாங்களிப்படிப் பேசுவது நியாயமல்ல. தாங்களிதுவரையி லிப்படிப் பேசினதில்லை. கோபத்தினு லிப்படி யெல்லாம் சொல்லுகிறீர்களென்பது நன்றாய் விளங்குகிறது. ஆயினு மரசனுக்குத் தன் கோபத்தை யடக்கிக் கொள்ள சக்தியில்லாவிடில் ராஜ்யங்களி லெவ்வளவு கெடுதல்களுண்டாகுமென்பதை நீங்க ளறியவில்லைபோல் தோன்றுகிறது. அறிந்திருப்பீர்களானு லிப்படி யெல்லாம் பேசியிருக்க மாட்டீர்கள். அதெல்லா மிருக்கட்டும். இனியொரு க்ஷணமேனும் நான் மந்திரியாயிருக்க முடியாது.

கும்—என்ன சொன்னீர்?

மந்—இதோ ராஜினுமா கொடுக்கப் போகிறேன். பெற்றுக்கொள்ள வேண்டும். அதைக் கொடுப்பதற்குமுன் நானப்படிச் செய்கிறதற்குக் காரணத்தையும் கூறுகிறேன். தாங்கள் கோபங்கொள்ளாமற் கேட்கவேண்டும். தன் ராஜ்யத்திலுள்ள ஜனங்களின் ஹிதத்தைக் கோருவது தானரசனுக்கு முக்கியமான தர்மம். ஜனங்களைத் தனது குழந்தைகள்போல் பாவித்து அவர்களுடைய குறைகளைத் தீர்த்து அவர்களுடைய அபிவிருத்தியை நாடுவது அரசனுடைய கடமை அவர்களுக்கு இகசுகம் மாத்திரமேயல்லாமற் பரசுகத்தையுமடையும் மார்க்கங்களை யேற்படுத்தி அம்மார்க்கங்களிலவர்கள் தவறாமல் நிற்பதற்குரிய சாதனங்களையு முண்டாக்கிக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்து வருவது

தான் ராஜநீதி. மற்ற ராஜதர்மங்களெல்லா மதிலடங்கி யிருக்கின்றன. மேற்சொன்ன வேற்பாடுகளை நாம் செய்யும் பக்ஷத்தில் நமது ராஜ்யத்திற் கொலை களவு முதலியகெட்ட தொழில்கள், பயிரழிவு, ஜலமில்லாமை முதலிய துர்பிக்ஷ சின்னங்களி வைகளெல்லா மிருக்கமாட்டா. ஜனங்களும் சன்மார்க்கத்தில் நின்று பகவத் பாதாரவிந்தத்தை யடைய முயன்றுகொண்டே யிருப்பார்கள். இதை யெல்லாம் நானனுபவித்துச் சொல்லுகிறேன். மேலும் ராஜ்ய முழுவதிலு மொற்றுமை யிருக்கும். ஒற்றுமை யில்லாமலொரு காரியமும் நடவாது. அதுவும் ராஜ்ய காரியங்கள் சரிவர நடக்க வேண்டுமானால் ராஜ்ய பாரத்தை வகிக்கு முத்தியோகஸ்தர்க ளொரு யந்திரத்திலிருக்கும் சக்கிரங்களெப்படி யொன்றை யொன்றடுத்து ஒற்றுமையாயிருந்து தங்கள் வேலையைச் செய்கின்றனவோ அதேமாதிரி ஒற்றுமையாய்த் தங்கள் தங்கள் தொழிலைச் சரிவரச் செய்து முடிக்கவேண்டும். அந்த வொற்றுமையை நிலைநிறுத்துவ தரசனுடைய கடமை. தன்னுடைய நடபடிக்கைகளாலும் தான் அவர்களிடத்திற் பாராட்டுகிற அன்பினாலும் அக்கடமையை நிறைவேற்ற வேண்டும்.

அந்தப்படிக்கு நீங்கள் நிறைவேற்றி வந்தீர்களா? ஜனங்களுடைய ஹிதத்தைக் கருதினீர்களா? ராஜ்யம் முழுவதும் நாஸ்திகம் பரவுமென்றல்லவோ பயந்தேன். நல்ல காலம் பிறந்ததால் மீராபாய் தங்களுக்குப் பத்நியானாள். அவளிங்குவந்த பிறகெப்படி ராஜ்ய மெல்லா விதத்திலேயும் நல்லஸ்திதிக்கு வந்ததென்பது தங்களுக்கே தெரிந்த விஷயம். இப்போதவளை நீங்க ளந்தப்புரத்தை விட்டு நீக்கிச் சுமாரொரு வருஷகாலமாகிறது. இந்த ஒரு வருஷ காலத்தில் ராஜ்யத்துக்கு வந்திருக்கும் கேடுகளைக் கவனித்தீர்களா? அவைகளை யெல்லாம் குறித்து யோசிப்பதற்குச் சாவகாசமிருந்ததா? அந்த மீராபாயை யெப்படி ஹிம்சிப்பதென்றல்லவா யோசனை பண்ணிக்கொண்டிருந்தீர்கள்.? அவளென்

றையதின மிவ்வரண்மனையை விட்டுச் சென்ருளோ, அன்
றைக்கே ஜனங்களுக்கு தங்கள் மீதிருக்கும் பக்தியு மன்பும்
விலகிவிட்டன. ஆகவே ராஜ்ய காரியத்தை யொற்றுமையா
யிருந்து நடத்தவேண்டுமென்கிற எண்ணமும் போய்விட்
டது. ராஜனிடத்திற் பயமும் மரியாதையு மிருந்தாலல்ல
வோ ராஜ காரியத்தில் சிரத்தை யிருக்கும். இப்போது
நமது உத்தியோகஸ்தர்கள் தங்களதிகாரிகளைச் சட்டை
செய்வதில்லை. தனக்குத் தானகவே எல்லாம் செய்ய ஆரம்
பித்திருக்கிருர்கள். எப்படி நமது சரீரத்தை யாளும்
ஜீவன் சென்றபிறகு தனக்குத்தானே விடப்பட்டிருக்கும்
சரீரத்திலுள்ள ஒவ்வொரு அணுவு மொற்றுமை யில்லாம
லந்த ரூபத்தை யழிக்கின்றனவோ அதேமாதிரி யடக்கியாள
ஒரு சரியான அதிகாரி யில்லாததாலிந்த உத்தியோகஸ்தர்
கள் தங்கள் ராஜ்யத்தைப் பாழாக்குகிருர்கள். முன்னே
மீராபாயிடத்திலிருந்த பக்தியின லெல்லோரும் தங்கள்
தங்கள் தர்மத்தைச் சரிவரச் செய்துவந்தார்கள். இப்
போத தர்மந்தானெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது. ராஜ்
யத்தில் களவுகள் நாளுக்கு நா ளதிகரித்துக் கொண்டிருக்
கின்றன. களவிட்டவர்களைக் கண்டு பிடிக்கத் தகுந்த சிப்
பாய்கள் கிடையாது. அப்படி யாராவதொரு களவாளி
அகப்பட்டாலவன் தாங்கள் மீராபாயை வருத்துகிறதைத்
தான் களவிட்டதற்குக் காரணமாகச் சொல்லுகிருன்.
ஜனங்கள் ராஜாக்ஞையை நிந்திக்கிருர்கள். நாமேதாவது
கண்டிக்கத் தொடங்கினல் நம்மை யெதிர்த்து வருகிருர்கள்.
இப்படி தினமொரு கலகம் நடந்து கொண்டிருக்கிறது.
நமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களை நாம் கண்டித்தா
லவர்கள் உடனே ராஜினமாக் கொடுக்கிறதாகச் சொல்லுகி
ருர்கள். சிலர் ராஜினமாவும் கொடுத்துவிட்டார்கள். நமது
ராஜ்யத்தில் வெகுநாளா யிருந்த பிரதானி நேற்றை தினம்
ராஜினமா கொடுத்துவிட்டார். அதிபுத்திமானன நமது
நியாயாதிபதி நாளைக்கு ராஜினமா கொடுக்கப்போகிருராம்.
எங்கு பார்த்தாலும் சண்டையும் சச்சரவும் களவும் கொலை
யும் அதர்மமும் ராஜத் துரோகமும்தான் பிரதானமாயிருக்

கின்றன. எனக்கிதற் கென்ன செய்கிறதென்று ஒன்றும் தோன்றவில்லை. இவைகளெல்லாம் தாங்கள் மீராபாயை— ஐயோ, பாவம், அவளை வருத்துகிறவர்களு முண்டோ— அந்த ஸ்திரீ மாணிக்கத்தை வருத்துகிறதாற் றானுண்டா கிறதென்பதிற் கொஞ்சம்கூட சந்தேகமில்லை. இப்போ தவ்வம்மணியைத் திரும்பவுமிவ்வரண்மனைக்கு வரவழைத்து அவரை முன்னிருந்த பதவியில் வைப்பீர்களாயின் இந்த க்ஷணமே அதர்மங்களை யெல்லாம் நிறுத்தி விடுகிறேன், பாருங்கள். அப்படிச் செய்யாத பக்ஷத்திலினி நானிங்கி ரேன். இவ்விராஜ்யத்திலுமிரேன்.

மகாராஜ், நானொரு வார்த்தை கடைசியாகச் சொல்லு கிறேன். அதை தாங்கள் கவனமாய்க் கேட்கவேண்டும். தாங்கள் சிறு குழந்தையா யூஞ்சலில் விடப்பட்டிருந்த போது தங்கள் தகப்பனுரொருநாளென்னைக் கூப்பிட்டு, "மந் திரீ, எனக்கோ வயதாய்விட்டது. பையனோ சிறியகுழந்தை. அவன் ராணுப்பட்டம் கட்டிக்கொண்டு என் ராஜ்யத்தைச் சீராயாளும்படியாக நீ பார்த்துக் கொள்ளவேண்டியது," என்று சொன்ன வார்த்தைகளின்னுமென் காதில் த்வனித் துக்கொண்டிருக்கின்றன. பரம்பரையாயுங்கள் குலத்துக் குழைத்திருக்கிறது என் குலம். அந்த அபிமான மின்னு மென்னை விடமாட்டேனென்கிறது, என்னை இதைச் சொல்லத் தூண்டுகிறது. தாங்களிவ்விதம் மீரா பாயிடத் தில் விரோதங்கொண்டிருப்பதற்குக் காரணம் அந்த சுந்தரீ பாயென்றே எனதபிப்பிராயம். நடக்காத சமாசாரங்களை யெல்லாம் நடந்ததாகத் தங்களிடம் சொல்லி யுங்களுடைய புத்தியைத் திருப்பியிருக்கிருளென் றெனக்குத் தோன்று கிறது. அந்த சுந்தரீபாயைப்பற்றித் தங்களைவிட எனக் கதிகமாய்த் தெரியும். அவளைச் சாதாரணமான ஸ்திரீ யென்றெண்ண வேண்டாம். நான் போய் வருகிறேன்.

கும்— ஓய், என்னைப் பயமுறுத்துகிறீரோ?

மங்—அப்படி யொன்றுமில்லை யரசே. இனி நானிங்கு தாமதியேன். (போகிருர்)

கும்—இதென்ன? எனக்கு வந்திருக்கும் கேடு நாளுக்கு நாளதிகரித்துக் கொண்டிருக்கிறதே. இனியென்னுற் பொறுக்க முடியாது போலிருக்கிறதே. எவ்வளவென்னை நிந்தித்துக்கொண்டிருந்தாலுமிவர் ராஜிஞமா கொடுப்பாரென்று கனவிலும் நினைக்கவில்லையே. நமது பிரதானி ராஜிஞமா கொடுத்தாய் விட்டதாமே. நியாயாதிபதி நாளைக்குக் கொடுக்கப் போகிறுராமே. இவர்களில்லாமல் நான் ராஜ்யத்தை எப்படி யாள்வது! இதுவரை ராஜ்யபார விஷயமாக எனக் கதிகமான கவலைகளைக் கொடுக்காமல் ராஜ காரியங்களைப் பார்த்து வந்த நமது மந்திரி இப்போது போய்விட்டாரே. எவ்வளவு தடவைகளில் நானவரை ஹிம்சித்திருக்கிறேன். எவ்வளவு தடவைகளில் அவர் மீது கோபங் கொண்டு சொல்லக்கூடாத வார்த்தைகளெல்லாம் சொல்லியிருக்கிறேன். அவைகளையெல்லாம் கவனியாமலென் ராஜ்யத்தைத் தனது ராஜ்யமெனக் கருதிப் பாதுகாத்து வந்தாரே. நானென்ன குற்ற மவருக்குச் செய்தாலு மவற்றையெல்லாம் பொறுத்து என்னிடம் தன் குழந்தையிடத்திற் போலவே செல்லம் கொடுத்துவந்தாரே. என் தந்தையிறந்தபிறகு நாளுெரு காலத்திலு மவரில்லாத குறையையுணராதிருக்கும் படிக்கு அந்த ஸ்தானத்தில் தானிருந்தென்னை யாதரித்து வந்ததாயிற்றே. அவரிங்கே யிருந்தவரையிலெனக் கிந்தமாதிரி யொன்றும் தோன்றவில்லையே. அவர் ராஜிஞமா கொடுத்த பிறகல்லவோ அவரருமை எனக்குப் புலப்படுகிறது. நானிப்போதென்ன செய்வது? மந்திரியுமில்லை, பிரதானியு மில்லை, நியாயாதிபதியு மிருக்கப் போகிறதில்லை. இவர்களில்லாமல் நானெப்படி ராஜ்யபரிபாலனம் செய்வது? "பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்" என்பதுபோ லெனக் கேற்கனவே யிருக்கும் கஷ்டங்கள் போதாவென்று நிமிஷத்துக்கு நிமிஷம் புதிதான கஷ்டங்கள் வந்து கொண்டிருக்கின்றனவே. என் வாழ்நாள் முழுவதையும் நானிப்படிக் கஷ்டப்பட்டுத் தான் கழிக்கவேண்டி வருமோ? எனக்கு முதன் முதலில் துக்கமென்பதிந்த மீராவாலல்லவா உண்டாயிற்று. ஐயோ, யோசித்துப் பார்த்தா லிவளரண்மனையை விட்டுப்போகு

முன் நானிவ்வளவு கஷ்டப்படவில்லையே. இவளை அரண் மனையினின்றும் நீக்கினு லெனக்குத் துன்பம் குறையு மென்று நினைத்திருக்க நானிப்போதப் பேதையைக் காட்டி லும் பதினுயிரம் மடங்கு கஷ்டப்படுகிறேனே. ஒருவேளை யவளை யிவ்வரண்மனையி னின்றும் விலக்கி வைக்கா திருந் திருப்பேனுை லெனக்கிப்போ திவ்வளவு கஷ்டம் நேர்ந் திருக்குமா?—சீ, இந்தப் பாபியையாவது அரண்மனையில் வைத்திருப்பதாவது? ஐயோ! என்ன துரோகம் செய்தாள் இப்படிக் கெட்டுப் போவாளென்று நானெருபொழுது மெண்ணவில்லையே. அவள் முதன் முதல் இந்த அரண் மனைக்கு வந்த போதென்ன குணவதி போலிருந்தாள், என்னிடத்திலென்ன பிரியம் வைத்திருந்தாள். அவளை விட்டொரு நிமிஷம் கூடப் பிரிந்திருக்க எனக்கு மனம் வாரதபடி என்னிடமன்பு பாராட்டி வந்தனளே. அடீ, இப்படி நீ படுபாபியாய்ப் போவதற்கோ என்னிடமவ்வளவு பிரேமை காட்டிவந்தனை? இப்படி நீ துரோகி யாவதற்கோ என் மனதை யப்படிக் கவர்ந்திருந்தனை? அந்தக் காலத்தி லிந்த சுந்தரியைக்கூட நான் கவனித்ததில்லையே. என் மனது முழுவதையு மவளிடம் வைத்திருந்தேனே. நீயப் படி யிருந்திருக்கவும் வேண்டாம், இப்படி யிருக்கவும் வேண்டாம்.—இவ்வளவு நேரமவ ளிறந்திருப்பாளா? சுந் தரீ—சீ, அவளை யங்கல்லவோ அனுப்பி யிருக்கிறேன்.— என்புத்தி தடுமாறுகிறதே.

(தொடரும்.)

ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர், யம். ஏ.

நக்ஷத்திர சேவகர்களின் சங்கம். *

சிறுவர்களுக்கு கடிதம்.

முதலாவது.

நக்ஷத்திரமென்றால் என்ன?

சிறு குழந்தைகளே உங்கள் பெயர் எனக்குத் தெரியாது. ஆனால் ராமன், கிருஷ்ணன் கோவிந்தன் மகாதேவன் என்று நான் நினைக்கலாம். ஒருநாள் உங்கள் பெயரை எனக்கு எழுதிச் சொல்லும்படியாக நான் விரும்பி எழுதுவேன். அப்பொழுது உங்களைமுன்னைப் பார்க்கிலு மதிகமாய் அறிந்து உங்களுடன் பேசுவேன். நீங்கள் எல்லாரும் நக்ஷத்திர சேவகர்களென்று அழைக்கப் படுகிறபடியால் நக்ஷத்திரத்தைப் பற்றி உங்களுக்கு சில விஷயம் சொல்ல விரும்புகிறேன். அது ஒரு அழகான பெயர். அதனால் என்ன அர்த்தம் ஏற்படுகிறதென்பதைப்பற்றி அறிய முயலுவோம். ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கையில் இராக்காலத்தில் வெளியில் போய் பார்ப்பீர்களென்று நான் நம்புகிறேன். வெளிச்சத்தின் சிறு பொட்டுகள் போன்ற இவைகள் எவ்வளவு அழகாகயிருக்கின்றன! நம்முடன்பேசி தங்களைப்பற்றி யெல்லாம் நம்மிடம் சொல்ல இஷ்டப்படுகிறவைகள் போல் அவைகள் மினுமினுக்கின்றன. நீங்களும்கூட நக்ஷத்திரங்கள் தான் என்று நான் சொல்லும் பட்சத்தில், நீங்கள் என்னை அறியமாட்டீர்கள். நான் எந்தக் கருத்தை வைத்துச் சொல்கிறேன் என்பதைப்பற்றி வியப்படைவீர்கள். என்றாலும் நீங்கள் எதார்த்தமாகவே நக்ஷத்திரங்கள் தானென்றும் தெளிவாய்ப் பிரகாசிக்கலாமென்றும் நான் உங்களுக்குக் காட்டக்கூடுமென்றும் நினைக்கிறேன். உங்கள் தகப்பனார் தாயார் தங்கள் கைகளில் உங்களைத் தழுவிக்கொள்ள உங்களை அழைக்கையில் வெளிப்படையான உங்கள் கைகள் பாதங்கள், புஜங்கள் தலை

---

* சகோ. கே. எஸ். ராமசந்திரய்யரவர்களால் மொழி பெயர்க்கப் பெற்றது.

கள் சரீரங்கள் இவைகளே மட்டும் அவர்கள் அவ்விதம் அழைக்கிறார்களில்லையென்று நீங்கள் எல்லாரும் அறிவீர்கள். அவர்கள் விசுவசிப்பது, சரீரத்துக்குள்ளிருக்கும் உங்களை (ஜீவாத்மாவை) தான். அதையே அவர்கள் அழைக்கிறார்கள். அப்படி உள்ளுக்குள்ளிருக்கும் உங்களைத்தான் எதார்த்தமான ராமன், கிருஷ்ணன், கோவிந்தன் மகாதேவன் என்று சொல்லப்படுவது. உங்கள் சரீரங்கள் மாறுதலை அடைந்தும் கிழண்டு போயும் வியாதியுள்ளதாகவும் போனாலும் ஆத்மா அன்பைப் பாராட்டிக் கொண்டிருக்கும் உங்களுக்குள்ளிருக்கும் எதார்த்த உங்களை (ஆத்மாவை) ராம நக்ஷத்திரம், கிருஷ்ண நக்ஷத்திரம் கோவிந்த நக்ஷத்திரம் மகாதேவ நக்ஷத்திரம் என்று அழைப்போம். நீங்கள் உங்கள் நக்ஷத்திரங்களை நீங்கள் விரும்புகிறபடி பிரகாசிக்க விடுகிறதில்லை. சிறு குழந்தைகள் தங்களுக்குள்ளும், மற்றப் பிராணிகளிடத்தும் பக்ஷக்குறைவைக்காட்டினாலும், சுயநயத்தின்பொருட்டு பொருள்களை இச்சித்தாலும் அப்பொழுது சிறுவர்களுக்குள்ளிருக்கும், பரமாத்மாவின் ஒளியான நக்ஷத்திரங்கள், சிலவேளைகளில் மேகங்களால் மறைபட்டுப் போகிறதுபோல, மறைபடுகின்றன. மேகம் வந்து மூடிக்கொண்டபடியால் அழகாய்ப்பிரகாசிக்கும் ஒளியை பார்க்கக் கூடவில்லை. உங்களிடம் எல்லாம் "ஒளி" யிருப்பதால் உங்களை சிறு நக்ஷத்திரங்களென்று கூப்பிடுவோம். நீங்கள் சுயநலத்தைப் பாராட்டாமல் மற்றவர்களை சந்தோஷிப்பிக்க முயலுகையிலும் உங்களில் ஒவ்வொருவரிடமுமிருக்கும் நக்ஷத்திரமும் பிரகாசித்து மினு மினுக்கிறது. அந்தச் சிறு நக்ஷத்திரம் எவ்வளவு அழகாகயிருக்கிறதென்று அப்பொழுது பார்க்கக்கூடும்.

ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களில் சிலவைகள் மற்றவைகளைப் பார்க்கிலும் அதிகப் பிரகாசமுள்ளவைகளாயிருக்கின்றன. அவ்விதமாகவே நமக்குள்ளிருக்கப்பட்ட நக்ஷத்திரங்களும் சிலவைகள் அதிகப் பிரகாசமுள்ளவைகளாக இருக்கின்றன. சிலர்களிடத்தில் நக்ஷத்திரங்கள் இருப்பதே தோன்றாதபடியிருக்கின்றன. வெகு காலத்

துக்குமுன் மிகவும் அழகான நக்ஷத்திரத்தை உடைத்தாயிருந்த சிறு குழந்தை ஒன்றிருந்தது. அநேக ஜன்மங்களில் பரகைங்கரியம் செய்து வந்ததினுல், அக்குழந்தையின் நக்ஷத்திரம் பிரகாசமுள்ளதாக இருந்தது. அந்த நக்ஷத்திரத்தைப் பார்த்த மூன்று ஞானவான்கள் ஏதோ பெரிய அழகான ஒரு விஷயம் சம்பவிக்கப் போகிறதென்று தெரிந்து கொள்ளும்படியாக அவ்வளவு பிரகாசமுள்ளதாக அது இருந்தது. ஆகையால் அவர்கள் நக்ஷத்திர தூதர்களானுர்கள். "நாங்கள் அவர் நக்ஷத்திரத்தை கண்டு விட்டோ"மென்று சொல்லி சந்தோஷித்தார்கள். இக்குழந்தையானது வளர வளர இக்குழந்தையின் நக்ஷத்திரத்தின் பிரகாசமும் அதிகப்பட்டு வந்தது. கடைசியில அக்குழந்தையின் வழியாக பெரிய குருநாதருடைய ஒளியானதுமெதளிவாய்ப் பிரகாசித்தது. உலகத்தாருக்கு அதினுல் க்ஷேமமுண்டாயிற்று. இது நடந்து வெகுகாலமாயிற்று. ஆனுல் சமீபத்தில் குருநாதர் மறுபடியும் வருகிருர். மேற்கண்ட மூன்று ஞானவான்களைப்போல் நாம் அவருடைய நக்ஷத்திரத்தைப் பார்க்கவேண்டும். எது அழகுள்ளதும், நன்மையானதும், பக்ஷமுள்ளதுமோ அதை நாம் செய்யவேண்டும். அப்படியானுல் மறுபடியும் உலகத்துக் குதவி செய்யவரும் பரமகுருவினுடைய அழகான நக்ஷத்திரத்தை நாம் பார்ப்போம். ஆகையால் நக்ஷத்திரமென்ருல் நமக்குள்ளிருக்கும் நட்சத்திரத்தை மட்டும் குறிக்கவில்லை. எல்லா மனிதர்களுக்கும் வழி காட்டும் நக்ஷத்திரமான, ஜகத்குருவின் நக்ஷத்திரமென்றும் அர்த்தமாகும். இந்த ஜகத்குருவானவர் அவருடைய அழகான நக்ஷத்திரத்துடன் இவ்வுலகத்துக்கு அநேகம் தடவை வந்திருக்கிருர். புருஷர்கள் ஸ்திரீகள் சிறு குழந்தைகள் இவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிருர். உங்களுக்கு ஏதாவது ஒரு காரியத்தை எவ்விதம் செய்கிறதென்று தெரிந்தால் அந்த வேலையை எவ்விதம் செய்கிறதென்று வேறு ஒருவனுக்கும் காட்டலாம். உங்களில் யாருக்காவது நூல்கள் பின்னவாவது,மற்ற விசித்திரமான வேலை செய்யவாவது தெரிந்தால், அப்படித் தெரிந்தவனுடைய தம்பி, அல்லது சகோதரிக்கு அவைகளை

எவ்விதம் செய்கிறதென்று காட்டலாம். நாம் எதை அறிய விரும்புவோமோ அதையெல்லாம் ஜகத்குரு அறிவார். அவர்தான் நம்முடைய நக்ஷத்திரம், உங்களுடைய நக்ஷத்திரம், என்னுடைய நக்ஷத்திரம். அவர் மூலமாய் நம்முடைய சிறிய நக்ஷத்திரங்களை துல்சகமாய்ப் பிரகாசிக்கும்படி செய்யலாம். உங்களுக்கு வயதான மேல் ஜகத் குருக்கள் உலகத்துக்கு விஜயம் செய்வதைப் பற்றி வாசிப்பீர்கள். ஒவ்வொரு தேசத்தார்களும் அவர் அவர்கள் குருநாதர்களை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் அநேகம் தடவை வருகிறார்கள். அடுத்த தடவை ஜகத்குரு வரும்பொழுது நாம் அவரைக் கண்டு விசுவசிப்போமானால் நமக்கு அதிக சந்தோஷமுண்டாகும். உங்களுடைய அல்லது என்னுடைய சரீரத்தைப் போலுள்ள மனித சரீரத்தில் அவரை நீங்கள் பார்ப்பீர்கள். ஆனால் அவர் அதிக அழகுள்ளவராகக் காணப்படுவார். ஒரு பெரிய அழகான நக்ஷத்திரம், (ஜகத் குரு) அந்த மானிட சரீரத்திலிருப்பதாக நாம் அறியக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவர் வருகைக்கு நாம் எவ்விதமாக ஆயத்தம் செய்யலாம்? பூர்வகாலத்திய ஜகத்குருக்களின் சரித்திரங்களை நாம் வாசிக்கலாம். நாம் அவர்களைப் பற்றி சதா நினைக்கலாம். அவர்களைப்போல் நாமும் நடக்க முயலலாம். நம்முடைய சிறிய நக்ஷத்திரங்களை பிரகாசமுள்ளவைகளாகவும் தெளிவானவைகளாகவும் செய்ய முயலலாம். அப்பொழுது, குருநாதர் வருகையில், அவருடைய நக்ஷத்திரத்தை நாம் பார்க்கலாம்.

ஒவ்வொருநாளும் அந்த நக்ஷத்திரத்தை நினைத்து 'நான் நக்ஷத்திரத்தின் ஒரு தூதன்' என்று சொல்லுங்கள். நக்ஷத்திரத்திற்காக எதாவது ஒரு அலுவல், கைங்கரியம் செய்ய இச்சிக்கிறவன் தான் 'நக்ஷத்திர தூதன்' என்று சொல்லலாம். சிறு குழந்தைகளும்கூட ஊழியக்காரர்களாயிருக்கக்கூடும். ஒவ்வொருநாளும் நக்ஷத்திரத்தைப்

பற்றியும் அது எதைக் குறிக்கிறதென்பதைப் பற்றியும் சதா நினைத்துக்கொண்டிருப்பீர்களானால், பக்ஷமுள்ளவர்களாகவும், சாந்தமுள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவு மிருப்பது சுலபமென்று காண்பீர்கள்.

பள்ளிக்கூடத்தில், அவருக்காக, படிப்பதாக நினையுங்கள். விளையாட்டு காலத்தில் உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கு அன்பையும் சந்தோஷத்தையும் கொடுங்கள்.

நக்ஷத்திரத்தின் சிறு தூதர்களே, நீங்கள் எவ்விடத்திலிருந்தாலும் நீங்கள் நக்ஷத்திர சங்கத்தைச் சேர்ந்தவர்களென்பதை மட்டும் மறக்கவேண்டாம். ஜகத்குருவானவர் நீங்கள் அவருக்காக செய்திருக்கும் செய்கைகளைக் கண்டு சந்தோஷிக்கும் வண்ணம், உங்களுடைய நல்ல எண்ணங்களாலும், அன்பான செய்கைகளாலும், உங்களுடைய நக்ஷத்திரங்களைப் பிரகாசிக்கும்படி செய்யுங்கள். நன்மையானதும் உண்மையானதும் எதுவோ அதைப் பின்பற்ற முயலுங்கள். மற்றவர்களுடைய நக்ஷத்திரங்கள் துலக்கமாய்ப் பிரகாசிக்கும்படி செய்ய அவர்களுக்கு உதவி செய்யுங்கள். ஒவ்வொருவரிடமும் நக்ஷத்திரங்களும் துலக்கமாய்ப் பிரகாசிப்பதைப் பார்க்க வேண்டுமென்று ஜகத்க்குரு விரும்புகிறார். இதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வீர்களானால், நீங்கள் ஒருக்காலும், துடுக்கானவர்களாகவும் பக்ஷ மற்றவர்களாகவும், குரூரமுள்ளவர்களாகவும் இருக்கமாட்டீர்கள். சாந்தம், அன்பு, ஊழியம், இவைகளாலன்றி வேறு விதமாய் உங்களுடைய நக்ஷத்திரங்களைப் பிரகாசிக்கும்படி செய்ய முடியாது. சிறு குழந்தைகளே, உங்கள் நக்ஷத்திரங்கள் தெளிவாயும், துலக்கமாகவும், பிரகாசிக்கட்டும். ஜகத்குரு வருகையில் நீங்கள் அவரைப் பார்ப்பீர்களாக.

உங்கள் அன்புள்ள,

எப். அருண்டேல்.

தற்கால நிலைமை.

(370-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்திரீயினிடம் செல்லலாம் என்று வியவஸ்தை செய்திருக்கிறார்களாம்! ஆ! இதென்ன கேடு! அத்தீவுகளில் கூலிகளுக்குள் கற்புடைய ஒரு ஸ்திரீயைக் காண்பது ஆச்சரியமாம். இது மாத்திரமல்ல. குழந்தைகள் பிறந்தமுதல் இவ்விதமான கெட்ட நடத்தைகளைக் கண்ணுற்று வளர்வதினால் அவர்களுக்கு நல்ல நடத்தையே பிடிபட மார்க்கமில்லாமல் போகிறதாம். பிஜீதீவுகளில் நடக்கும் கொடும் குற்றங்களில் 100-க்கு 90 குற்றங்கள் இந்தியர்கள் செய்தவைகளாம். பிஜியிலுள்ள குஷ்டரோகிகள் ஆஸ்பத்திரியிலுள்ள 300 குஷ்டரோகிகளில் பெரும்பான்மையோர் இந்தியர்கள் தான்.

*
* *

இம்மட்டோ? ஒப்பந்தக் கூலிகளைத் தவிர இதர இந்தியர்கள் கூட இந்த கூலிகளைப் பார்த்துக் கெட்டுப் போகிறார்களாம். ஸ்திரீகள் இன்மையால், அவர்கள் புருஷர்களை அடிக்கடி மாற்றிக்கொள்கிறார்கள். சிறு பெண்களை விலைக்கு வாங்குவதுபோல், மிகப்பட்டணம்கொடுத்து பெறுகிறார்களாம். இவ்விஷயங்களைச் சொல்லவும் நாவெழவில்லை. எழுதவும் பேனா ஓடவில்லை. இக்கொடும் நிலைமையைக் கேட்கும் காதும்புண்ணாகும். ஆனால் இந்த ஜனங்களுக்குள் இன்னும் குலதர்மம், கற்பு, இவைகள்பொருளற்றவார்த்தைகளாய்விடவில்லை. உதாரணமாக, ஒருவன் இறந்த பிறகு அவன் கற்புடைய பத்னியானவள் கற்புடையவராகவே பிரஹ்மசாரிணியாயிருந்தாளாம். அவளை இந்தியக் கூலிகளனைவரும் "எம் தேவதை" யெனக் கொண்டாடினர்களாம். மற்றொரு கற்புடையவிதவையை பலமுறையாய்த் துயர்ந்தும் கெடுக்கமுடியாது போக, கடைமுறையில் பலாத்காரமாய் ஒரு ஓவர்சியர் என்ற கண்காணி கற்பழிக்க, இப்பாபச் செயலைச்

சகிக்காத பத்தொன்பது ஆண்பிள்ளைகள் அந்த கண்காணி யை சித்ரவதை செய்து பிறகு ஒவ்வொருவரும் தாங்களே கொன்றதாக வெளியிட்டார்களாம். ஒரு பெண் ஹிந்து தர்ம விதிப்படி ஒருவனுக்கு கல்யாணமாகியிருக்க, அவளை ஏமாற்றி வேறு ஒருவன் கூட்டிப்போய் சர்க்கார் கச்சேரி யில் கையெழுத்து போட்டு கல்யாணம் செய்து கொண்டா னும். அந்த தீவில் சர்க்கார் கச்சேரி கல்யாணத்தைத் தான் அங்கீகரித்தார்களாம். இந்த இரண்டாவது கல்யாணத் தை தர்ம விரோதம் என்று கொண்ட அம்மாதின் இரண்டு சகோதரர்களும் அப்பெண்ணை சுட்டுவிட்டு, தாங்கள் கொலை செய்ததாக ஒப்புக்கொண்டார்களாம். எங்கள் குல தர்மத்தை காப்பாற்றுவதற்காக நாங்கள் அப்படி செய் தோம் என்று சொல்லி தைரியமாய் சர்க்கார் தண்டனைப் படி உயிர் நீத்தார்களாம். இம்மாதிரியான சில சூசகங்க ளால் அவ்விடத்தில் உள்ள இந்தியர்களுக்கு நற்குணங்கள் முற்றிலு மற்றுப்போகவில்லை யென்று தெரியவருகிறது பிஜியிலிருக்கும் இந்தியசகோதரர்களை நாம் கடியயாதொரு காரணமும் இல்லை. அவர்கள் இரக்கத்துக்கே பாத்திரமா னவர்கள். அவர்களைப்போன்ற ஸ்திதியில் நாம் போய் இருந்தாலும் சரி, வெள்ளைக்காரர்களிருந்தாலும் சரி, இக் கூலிகளுடைய தாழ்ந்த கதியை அடைவதில் ஐயமில்லை. ஆகையால் எல்லாவற்றுக்கும் காரணமாயிருக்கும் இந்தகூலி ஒப்பந்த ஏற்பாட்டை இனி ஒரு நிமிஷம்கூட நடைபெ ருத வண்ணம் இந்தியர் எல்லோரும் ஏகோபித்து தீர்மா னம் செய்தால் இது நின்றுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

*
* *

மேற்கூறிய இந்தியக் கூலிகளை மட்டும் பார்த்த பிஜி தீவத்தார் இந்தியர்கள் எல்லோரும் அதேமாதிரியானவர் கள் என்று நினைக்கிறார்கள். அதனால் இந்தியாவின் கௌரவ மும் குறைகிறது. ஆகையால் எக்காரணத்தாலும் இந்த ஏற்பாட்டை நாம் முடிக்க முயலவேண்டியது அவசியம்:

ஸீதை, சாவித்திரி, கண்ணகி, நளாயினி முதலிய கற்புடை மங்கையர்களைப் பெற்ற பாரதவர்ஷத்தில் பிறந்த ஸ்திரீகள் புருஷர்க ளனைவரும் இங்கு நன்கு கவனிக்க வேண்டுவது ஒன்று உண்டு. புஜபலத்தை விட வல்லியது மனோபலம் என்பது யாவரும் அறிவார்கள். ஆனால் உண்மையாகவே இந்த பலத்தை நாம் உபயோகிப்பது கிடையாது. ஒவ்வொருவரும் தினந்தோறும் கொஞ்சநேரம், நம்முடைய தேசத்தில் ஜனித்து, மோசக்காரர்களுடைய மாயவலையில் சிக்கி, ஏமாந்து பிஜி முதலிய தேசங்களுக்குப்போய் பரிதபிக்கும் நமது சகோதரர் சகோதரிகளுடைய நிலைமையைக் குறித்து யோசித்து, இந்த கூலி ஒப்பந்த ஏற்பாடு இனி ஒரு நிமிஷம்கூட நடைபெறாத வண்ணம் கடவுளை பிரார்த்தித்து வேண்டிக்கொண்டால், அம்முயற்சி வீண்போகுமா? போகாது. ஒவ்வொரு கிராமத்திலும் பல ஜனங்கள்கூடி பேசி மேற்சொல்லிய தீர்மானத்தைக்கொண்டு அதிகாரிகளுக்கு மகஜர்கள் எழுதியனுப்ப வேண்டும். நமது ராஜப்பிரதிநிதியவர்கள் இவ்விஷயத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை அறிய ஆவலுள்ளவர்களாக விருக்கிறார்கள்.

ஆர் ரெங்கஸ்வாமி ஐயர்.

நன்மொழி.

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா யிடமில்லை காணுங்கால்
கண்காணியாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந்தாரே.

2067—திருமந்திரம்

ஆத்மபோதம்

(239-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹேமகூடம் போயிருந்த, சச்சிதாநந்த யோகீந்திரர் ஸாது சங்கம் முடிந்து தமது ஆச்சிரமம் வருகிறார், சிஷ்ய கோடிகள் எதிர் கொண்டழைக்கு வந்து வணங்கி நிற்கிறார்கள்.

யோகீந்திரர்:—அறிவிற்சிறந்த எனது அருமைச்செல்வர்காள், நான் ஹேமகூடம் போயிருந்த போது நடந்த விருத்தாந்தங்கள் நீங்கள் சிரவணம் செய்ய வேண்டிய அவசியமானவைகளே, மஹான் வசிஷ்ட மஹா ரிஷி, தற்காலம் இப்புவியில் ஜனங்களடைந்திருக்கும் மதாசாரக் குறைவுகளையும் அலங்கோலத்தையும் அவர்களை அவசியம் சீர்திருத்த வேண்டிய வழிகளையும் பற்றி சவிஸ்தாரமாகச்சொல்லி என்னையும் இன்னும் என்போன்ற நால்வரையும் இவ்விஷயங்களை கவனித்து வரும்படி பொறுப்புக்கட்டி, பிறகு அப்பியாசிகளுக்கு உத்தமோத்தம விஷயங்களை அவரவர்கள் பக்குவத்திற்குத்தகுந்தபடி எடுத்துரைத்து தனதிருப்பிடம் சென்றனர். ஆகவே நான் ஒப்புக்கொண்ட விஷயம் நடைபெறவும், சித்தியை யடையவும் நீங்களே எவ்விதத்திலும் காரணமாவீர்கள். ஆகையால் நான் சொல்லுவதை நன்கு கவனிப்பீர்கள்.

தத்வராயன்:—ஹே! குருநாதா! தங்கள் சொல்லுக்கு மிக்க ஓர் மந்திரமுமுண்டோ? சித்தமாய்க்காத்துக்கொண்டிருக்கிறோம். உடனே நாங்கள் செய்யவேண்டியனவற்றைத்திருவாய் மலர்ந்தருளவேண்டும், பிரபோ?

யோகி:—நல்லது கவனியுங்கள்.

நீங்கள் சிறு சங்கம் ஒன்று இன்று முதல் ஏற்படுத்திக்கொண்டு, வாய்க்கு மமயங்கள்* தோறும், கேவலம் விஷய வலையிற்கட்டுண்டு, மோஹத்தின் வசமாகி, நல்வழி தப்பி அல்லாடித்திரியும் இப்புவி மாந்தர்களுக்கு, தர்மம், ஆசாரம், சீலம் என்ற விஷயங்களைப்பற்றி பன் முறையும் போதி

---

* அமயங்கள் சமயங்கள் பிரகிருதங்கள்.

த்து வருவீர்கள். ஆனல் எக்காரியத்தையும் ஆரம்பித்தல் மாத்திரமே பெரிதாகாதாகையால் நீங்கள் சர்வ ஜாக்கிரதையாகவிருந்து ஆரம்பம் செய்யப்பட்ட காரியமானது உள்ளபடியே உத்தமமான பலனைக்கொடுக்குமாறு முயற்சிக்கவேண்டும். பின் வரும் சுலோகமும் உங்களுக்கு நன்கே விளக்கும்.

அநாரம்போ ஹி கார்யாணாம் ப்ரதமம் புத்திலக்ஷணம்
ஆரப்தஸ்யாந்தகமநம் த்விதீயம் புத்திலக்ஷணம் ॥

தவிர, இக்காரியத்தை நீங்கள் செய்ய முயலுவதே நீங்கள் நிதித்தியாசனம் செய்வதாகும். ஏனென்றால் முன் கூறிய வண்ணம், சிரவணம், செய்தபின், அதை மநநம் செய்வதும், கடைசியாக அதை அப்பியாசிக்கத்தொடங்குவதாகிய நிதித்தியாசனம் செய்வதுமே உங்களை உத்தமமாகிய மோக்ஷபலனை அடையச்செய்விக்கும். பின் வரும் சுலோகத்தின் தாத்பரியத்தைப்பார்க்க, இக்கருத்து நன்கு விளங்குவதுடன், நீங்கள் சாதாரணமான ஜனங்களைப்போலாக மாட்டீர்கள்.

ச்லோகார்த்தேந ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்தகோடிபி: ।
பரோபகார: புண்யாய பாபாய பரபீடநம் ॥

அப்பியாசமுறையில் மூன்றுவது படியில் ஏறப்பக்குவம் வந்தவர்களென்றும், ஆகவே பிறந்தும் பிறவாதவர்களைப்போலவும், இறந்தும் இறவாதவர்களைப்போலவும் சுகதுக்கங்களால் சலனமடையாதிருக்கும் உத்தமர்களைப்

---

2. மாந்தர் - மனிதர்கள்

சுலோகம்:—யாதொரு காரியத்தையும் ஆரம்பியாமலிருப்பதே முதன்மையான அறிவு, ஆரம்பம் செய்தபின் செய்து முடிப்பதே இரண்டாவது அறிவு.

1. தாத்பரியம் - கருத்து.

சுலோகம்:—அநேகம் சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதை அரை சுலோகத்தில் சொல்லுகிறேன். அதாவது, பிறருக்கு உபகாரம் செய்தல் புண்ணியத்தின் பொருட்டும், பிறரைத்துன்புறுத்தல் பாபத்தின் பொருட்டும் ஆகும்.

போன்ற சமாசநிலையை அடைந்தவர்களென்றும். இவ்வுலகத்தவர்கள் உங்களை பின்பற்றி நடத்தல் உசிதமென்றும் தெரிந்துதான் இவ்வரிய செயல்களைச்செய்து வருமாறு நீங்கள் நியமிக்கப்பட்டீர்கள். இச்செயல்கள் உங்களைமாத்திரம் அல்லாது உங்கள் குடும்பங்கள் முதலிய யாவையுமே உயர்வடையச்செய்யுமாகையால், மிக்க கவமானய்ச்செய்து வரவும், பின் வரும் சுலோகத்தின் தாத்பரியத்தையும் பார்க்க.

பரிவர்த்தினி ஸம்ஸாரே ம்ருதஃ கோவா நஜாயதே ।
ஸ ஜாதஃ யேந ஜாதேந யாதி வம்ஶஃ ஸமுந்நதிம் ॥

தத்வ:—ஹே! கருணாநிதே! தாங்கள் திருவாய் மலர்ந்தருளும் எதையும் பக்தியுடன் செய்ய எப்பொழுதும் சித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கிறோம்.

யோகி:—நல்லது கவனியுங்கள். முன் பகவான் பழத்தை யேற்றுக்கொண்டு பக்தனின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்த வரலாற்றைச் சொன்னேன். அதில் சபரி யென்ற வுத்தமியின் பக்தி விசேஷத்திற்காக பகவானே அவ்வம்மணியைத் தேடிவந்து தரிசனம் கொடுக்கப் போவதாய் மஹான் மதங்க *மஹரிஷி சொல்லியபின் அவ்வுத்தமி ஒருவாறு சமாதானமடைந்து அப்பெரியாரின் ஆச்சிரமத்தில் வாசம் செய்யலானாள் என்றும் பிறகு அப்பெண்மணி முக்தி லோகம் சென்ற விதத்தையும் சொன்னேன். இப்பொழுது பகவான் தீர்த்தத்தை ஏற்றுக்கொண்டு இஷ்டத்தைப் பூர்த்தி செய்த சரித்திரத்தைப் பற்றிச் சொல்லப்போகிறேன் கவனமாய்க் கேளுங்கள்.

(இன்னும் வரும்)

யோகி சுந்தரராஜம்

---

*சுலோகம்:—சதா சுற்றிக்கொண்டிருக்கிற சம்சாரத்தில் இறந்த யார்தான் பிறக்கவில்லை. யாதொருவன் பிறந்ததினால் அவ்வம்சம் உயர்வடையுமோ அவனே பிறந்தவன் மற்றவர்கள் பிறந்தும் இறந்தவர்களே.

மதங்கமஹரிஷியின் ஆச்சிரமம் பம்பாசரசின் சமீபம் ரிசியமூக பருவதததில்.

சமாசாரம்.

புதுக்கோட்டை சமஸ்தானம் ஆலங்குடியில் சென்ற ஒரு வருஷகாலமாய் புது அக்கிரகாரத்திலும் பழைய, அக்கிரகாரத்திலும் குடியிருக்கும் பிராமணர்களுக்குள் கக்ஷி ஏற்பட்டுவந்தது. இந்தக் கக்ஷியை எவ்விதமாகவாவது தீர்த்துவிடவேண்டுமென்று அவா ஷை ஊரிலிருக்கும் சப்ரிஜிஸ்திரார் மகா-ள-ள-ஸ்ரீ ராமபத்திரசாஸ்திரி அவர்கள். ஷை தாலூகா எட் அக்கவுண்டெண்டு மகா-ள-ள-ஸ்ரீ ஜி. சுப்பய்யா ஐயர் அவர்கள், ரிடையர்டு தாசில்தார் கே. எஸ். இராமசந்திர ஐயர் அவர்கள், ஆகிய இவர்களுக்குண்டாயிற்று. கடைசியாக நாளிது ஜனவரிமீ 7௳ யன்று ஷை ஊர் சிவாலயத்தில் நடந்த ஆருத்திரா 'தர்சனத்திற்காக வந்த ஷை இருகட்சிக்காரர்களில் முக்கியஸ்தர்கள் நடராஜர் முன்னிலையில் ஷை மூன்று பெயர்களுடைய பிரேரணையின் மேல் சமாதானமடைந்ததாகக் கேள்விப்பட மனமகிழ்கிறோம். அப்படி ஒன்று சேர்ந்ததற்கு அடையாளமாக அன்று பகல் இரு அக்கிரகாரத்தாரும் ஷை கோவிலில் பந்தி போஜனம் செய்து தங்கள் விரோதத்தை விட்டு சிநேகத்தன்மையைக்காட்டினதாகவும் கேட்க திருப்திகரமாயிருக்கிறது.

இப்பொழுது பலகிராமங்களில் கட்சிகள் ஏற்பட்டிருக்கிற விஷயம் எல்லாரும் அறிந்து விசனிக்கத்தக்கதே. இதின் இன்றியமையா தபலனுக வழக்குகள் அதிகப்பட கோர்ட்டுகள் ஜாஸ்திப்படக்காரணமாய் நாளுக்கு நாள் கோர்ட்டுகளின் சங்கை அபிவிருத்தியாய் வருவதைப்பார்க்கிறோம். இது தேச க்ஷேமத்துக்கு குறைவேயன்றி வேறல்ல என்று சொல்லவும் வேண்டுமோ? பரோபகார சிந்தையுள்ள ஒவ்வொருவரும் கட்சிகளை உலைத்து ஜனங்களுக்குள் சிநேகபாவத்தை அபிவிருத்தி செய்து வருவார்களேயானல் நமது தேசம் செழித்து அதிக சீக்கிரம் முன்னுக்கு வருமென்பது எல்லாரும் உணரக்கூடிய விஷயமே. தேசாபிமானமுள்ள ஒவ்வொருவரும் இது விஷயத்தில் கவனம் செலுத்திவர வேண்டுமாய்க் கோருகிறோம்.

முக்கிய அறிவிப்பு.

தேன் இந்தியா தியசாபிகல் கன்வேன்ஷன் நான்காம் கூட்டமும், ஐ. யஸ். கான்பரன்ஸும்:—நாளிது 1917௵ எப்பிரல்மீ 6௳ முதல் 9௳ வரை இவையிரண்டுமஹா ஸபைகளும் அடையாற்றில் கூடும்.

அடையாற்றிற்கு ஷை சபைகளுக்குச் செல்ல நினைக்கும் அங்கத்தினர் எல்லோரும், 1917ளூ மார்ச்சுமீ 15 உக்குள், மதராஸ், ஜார்ஜ்டவுன், ஒய். எம். ஐ. ஏ. கட்டடத்திலுள்ள மகா-௱-௱-ஸ்ரீ அ. ரங்கநாதமுதலியாரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

அடையாற்றில் தங்குதற்குச் சௌகர்யமாய், வேண்டிய அறைகளுக்கும், கொட்டகைகளுக்கும், மதராஸ, அடையாறு, தியசாபிகல் சொசைடி போஜனசாலை சூபெரிண்டெண்டெண்ட் மகா-௱-௱-ஸ்ரீ ஜே. ஸ்ரீநிவாஸராவ் அவர்கட்கெழுதி எற்பாடு செய்து கொள்ள வேண்டும். போஜனசாலை மாடியில் ஒரு அறையும், க்வாட்ராங்கில் என்று சொல்லப்படும் சதுரமான முற்றத்திலுள்ள மூன்று பெரிய அறைகளும், 2 சின்ன அறைகளும் மட்டும் தான் அச்சமயத்தில் கிடைக்கக்கூடியதாயிருக்கும். சின்ன ரூம் ஒன்றுக்கு மட்டும் வாடகை ரூ 2. மற்றெந்த அறைக்கும், ஒவ்வொன்றிற்கும் வாடகை ரூ 4. கூரைக்கொட்டகைகள் வேண்டுமானால், மார்ச்சுமீ 15உக்குள் மகா-௱-௱-ஸ்ரீ ஸ்ரீநிவாஸரவ் அவர்கட்குத் தெரிவிக்கவேண்டும். 12×9 அடி விஸ்தீர்ணமுள்ள ஒரு கொட்டகைக்கு பாய்களுடன் ரூ 10 வாடகை. பாய்கள் இல்லாமல் ரூ 7-8. தான் வாடகை. ரூம் அல்லது கொட்டகை தேவை யென்று உத்திரவு கொடுப்போர் பணத்தையும் உடனே யனுப்பவேண்டும். 1917ளூ மார்ச்சுமீ 15உக்குள் ஒரு ரூபாய் அனுப்புகின்றவர்களெல்லோருக்குமாகச் சேர்ந்து ஒரு பொதுக் கொட்டகை போடப்படும்.

வரும் அங்கத்தினர்கள் அவரவர் தீர்த்தப்பாத்திரமும் வெளிச்சத்திற்கு கை லாந்தல்களும் கொண்டுவருமாறு வேண்டுகிறோம்.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாயல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனேஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள், இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொ வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

	ரூ அ பை
விலை பாக்கெட் 1-க்கு ரூ.	0—8—0
டசன் 1-க்கு ரூ.	5—0—0

விலாசம்:—வி. ஏ. எஸ். பாணி,
நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

இந்தியாவில் மிகப்பெரிதும்

பழமையுமான வைத்தியசாலை எது ?

1881-ஆல் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்.

சஞ்சீவி

பாலமித்ர.

300 மாத்ரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய் தெரிவிப்போருக்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடைகொடுக்கிறோம்

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்.

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும, சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35-ஆல காலமாய் உபயோகிப்போருக்கு அற்புதகுணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள் 32. மாத்ரையின் விலை ரூ 1.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்கநிக்ரஹஔஷதாலயம் 77. மேல
கோபுரம் மதுரை.

இருமல், கபம், காசம் இவைகளுக்குச்சிறந்தமருந்து

காசாந்தக

மாத்ரைகள் டப்பி 1-க்கு விலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள்விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்.